
உ

# திருக்கோணமலை
# வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில்

# மஹா கும்பாபிஷேக மலர்



13.11.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்

# திருக்கோணமலை வில்லூன்றி
## கந்தசுவாமி ஆலய
# மஹா கும்பாபிஷேகம்
## 13.11.2011



# மண்டலாபிஷேகப் பூர்த்தி
## 31.12.2011

# மலர் வெளியீடு

**திருக்கோணமலை வில்லூன்றி கந்த சுவாமி ஆலய**
**இராஜகோபுரத் திருப்பணிச்சபையினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

# திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலய மூலமூர்த்தி



வள்ளி, தேவசேனா சமேத
சண்முகநாதப்பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


➢ **வாழ்த்தும் சமர்ப்பணமும் :** திரு.இரா சம்பந்தன் (பா.உ)
தலைவர் – திருப்பணிச்சபை

➢ **ஆசியுரை :**

மகா கும்பாபிஷேக மகிமை :– வியாகரண சிரோமணி
சிவஸ்ரீ. பூரண தியாகராஜக் குருக்கள்

சிவஸ்ரீ சுரா. சுதாஹரக் குருக்கள்
(ஆதின பிரதம் குரு)

வேதாகமமாமணி பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திர
குருக்கள் (ஸ்ரீ பத்திரகாளியம்மன் தேவஸ்தானம்
திருகோணமலை)

சிவஸ்ரீ. பூரண சுந்தரேஸ்வர ஐயர்
(வில்லூன்றி)

சிவஸ்ரீ. சிவ. சச்சிதானந்தேஸ்வரக் குருக்கள் (லண்டன்)

➢ **வாழ்த்துரை :** திரு.வொ.கந்தையா
(காந்தி மாஸ்டர்)

திரு.ஆ.ஆ. ஜெயரெட்ணம்
(நிர்வாக மணிய காரர்)

திரு.ஞா.கதிர்காமதாசன்
(நிர்வாக மணியகாரர்)

திரு.சு. திருஞானசம்பந்தர்
பொருளாளர் – திருப்பணிச்சபை

திரு.ந.செல்வ ஜோதி
(செயலாளர் – ஸ்ரீ மு.தொ.சபை)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வில்லூன்றி கந்த சுவாமி ஆலய இராஜகோபுரத்த திருப்பணிச் சபை உறுப்பினர்கள்

- என்னை ஆட் கொண்ட வில்லூன்றியான் : திரு.க.விஜயன் (ஸ்தபதி)

- கந்த வேலின் மகிமை : ஆகம கிரியா ஜோதி பிரம்மஸ்ரீ தியாக கமலராஜக் குருக்கள் (மட்டக்களப்பு)

- திருக்கோணமலை அருள் மிகு வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் வரலாறு : திரு.ஆ.ஆ.ஜெயரெட்ணம் (நிர்வாக மணியகாரர்)

- வில்லூன்றி கந்த சுவாமி ஆலய கும்பாஷேகப் படங்கள்

- கோபுர மேற் குமரன் : கலா பூஷணம் செல்வி மணிமேகலாதேவி கார்த்திகேசு

- முருகப் பெருமானின் திருநாமங்களும் – பொருளும்

- கும்பாபிஷேகம் : அமரர் ஞானசிரோன்மணி பண்டிதர். இ.வடிவேல்

- இக்கோயில் வரலாற்றின் முக்கிய குறிப்புக்கள் : திரு.ஆ.ஆ.ஜெயரெட்ணம் (மணியகாரர்)

- கோயிலை வலம் வருவதன் நோக்கம் : ஓலைச் சுவடி

- நமஸ்காரத்தின் தத்துவம் : கோபுரம் வைகாசி – 2010

- பிரணவத் தியானம் : திரு அருள் (காயத்திரி சித்தம்)

- திருநீறு அணிவதன் விளக்கம் : ஓலைச்சுவடி (இந்து ஆசார – நம்பிக்கை இரகசியங்கள்)

- பிள்ளையார் கோயிலில் தோப்புக் காரணம் இடுவதன் நோக்கம் : ஓலைச்சுவடி

- நன்றி நவிலல் : திரு.ந.செல்வஜோதி
  திரு.கு. சிவமூர்த்தி
  (இணைச் செயலாளர்கள் திருப்பணிச் சபை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்தும் சமர்ப்பணமும்

**'கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே'** என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருக்கோணமலைத் திருப்பதிகத்தில் கோணேஸ்வரத்தைப் பாடியருளியுள்ளார் . திருக்கோணமலையின் தெய்விகத்தையும் பாரம்பரியப் பண்பாட்டு விழுமியங்களையும் கலாசாரங்களையும் பிரதிபலிப்பதாகக் கோயில்களும் சுனைகளும் அமைந்துள்ளன .

தமிழ் பேசும் சைவப்பெருங்குடி மக்களின் இருப்பைத் திருக்கோணமலையில் நிலைநிறுத்துவதாகவும் சைவக் கோயில்கள் விளங்குகின்றன. அவ்வாறான ஆலயங்களுள் ஒன்றான அருள்மிகு வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில் வரலாற்றுப் பெருமை வாய்ந்ததாகும் .

பாடல் பெற்ற திருக்கோணமலையில் சிவனுக்கோர் திருத்தலமாக கோணேஸ்வரராலயமும் சக்திக்கோர் திருத்தலமாகத் திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயமும் விநாயகப்பெருமானுக்கு ஓர் ஆலயமாக திருக்கோணமலை ஆலடி விநாயகராலயமும் போன்று . முருக பெருமானுக்கு ஓர்திருத்தலமாக அருள்மிகு வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் விளங்குகிறது. வில்லூன்றிக் கந்தசுவாமி கோயிலின் பழைமையையும் தொன்மையையும் அவ்வாலயத்தில் அமைந்துள்ள சோழசிற்ப முறையிலான விக்கிரகங்கள் எடுத்துகாட்டுகின்றன .

பெரும்பாலான சைவக்கோயில்களில் மூலமூர்த்தி யாகக் கற்களிலான சிலாவிக்கிரகமே வைக்கப்பட்டுள்ளது. ஆனால் வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில் மூலமூர்த்தியாக அருள்பாலிப்பது பஞ்சலோகத்திலான வள்ளி, தெய்வானை சமேதமுருகப்பெருமானே. ஆலயத்தின் முக்கியமான நிகழ்வுகளின் போது மூலமூர்த்தி உள்வீதி, வெளி வீதி வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பது அற்புதமானது. சைவ மக்களுக்கு இது ஒரு பெரிய வரப்பிரசாதமாகவும் அமைகிறது. பஞ்சலோகத்தாலான வள்ளி, தெய்வானை சமேதராக முருகப்பெருமான் திருக்கோணமலைக்கு வந்ததே ஓர் அற்புதமான வரலாற்று நிகழ்வாகும் . பஞ்சலோகத்திலான முருகப்பெருமான் விக்கிரகம் தமிழகம் திருவேரகம் என்னும் இடத்தில் வார்க்கப்பட்டது . அத்திருப்பணியை மேற்கொண்ட பெரியார் அங்கு திடீரென இறையருள் பெற்றிட,முருகபெருமானின்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அருட்பயணம் திருக்கோணமலை நோக்கி நகரஆரபித்தது . பேழை ஒன்றுக்குள் வைக்கப்பட்டிருந்த முருகப்பெருமானுடன் வந்து கொண்டிருந்த கப்பல் காற்றின் வேகம் போதாதகாரணத்தினால் திருக்கோணமலை - முடமாண்டான் என்ற இடத்தில் தரிக்க வேண்டியதயாயிற்று. கப்பலின் தலைவனுக்கு கனவில் வழங்கிய அருள் வாக்கின்படி இருதேவியருடன் பேழைக்குள் வந்த முருகப்பெருமானின். இரு நூறாண்டுகளுக்கு மேலான வரலாற்று பெருமை வாய்ந்த அருள்மிகு வில்லூன்றிக் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் இராஜகோபுர மகாகும்பாபிஷேகம் கடந்த 13ந் திகதி (13.11.2011) இறையருளால் இனிதே நிறைவேறியது. இராஜ கோபுர மகா கும்பாபிஷேகத்தை சிறப்பாக பிரதிஸ்டா பிரதம குருவாக இருந்து நிறைவேற்றித் தந்த வியாகாரண சிரோமணி சிவாசாரிய கலாநிதி வேதாகம சைவசித்தாந்த கிரியா விசாரத் சிவஸ்ரீ பூரண தியாகராஜ குருக்களுக்கும் மற்றும் தென்னிந்தியாவிலிருந்தும் ஏனையபகுதிகளிலிருந்தும் வந்து அருளிய சிவாச்சாரியர்களுக்கும் திருப்பணிச் சபையின் சார்பில் சிரம் தாழ்த்தி நன்றியை சமர்ப்பிக்கின்றேன் .

இராஜகோபுரத் திருப்பணியைச் சிறப்பாக நிறைவேற்றிய இந்தியா - தமிழகம் காரைக் காலைச் சேர்ந்த ஸ்தபதி கலியப்பெருமாள் விஜயன் அவர்களுக்கும், முருகப்பெருமானுக்கு மார்பு அங்கி செய்த மூதூர், சேனையூரைச் சேர்ந்த சபாபதி சிவ சோதிலிங்கம் ஸ்தபதியாருக்கும் திருப்பணிச் சபை சார்பிலும் விசேடமாக நன்றியைத் தெரிவித்துகொள்ளுகின்றேன்.

இத்திருப்பணிக்கு நிதிவழங்கி உதவிய வெளிநாடுகளைச் சேர்ந்த பெருமக்களுக்கும் நம் நாட்டுவள்ளல்களுக்கும் இராஜகோபுரத் திருப்பணிச் சபையினருக்கும் சிரமதானப் பணிபுரிந்த அருளன்பர்களுக்கும் ஸ்ரீமுருகன் தொண்டர் சபையினருக்கும் அருட்பணிகளை ஆற்றிய ஏனையோருக்கும் முருகப்பெருமானின் திருவருளும் ஆசிகளும் கிடைக்கவேண்டும் என இறைஞ்சுகின்றேன் . மகா கும்பாவிஷேகம் நிறைவேற்றுவதற்கு உந்து சக்தியாக அனைவரின் உள்ளங்களிலும் வீற்றிருந்து அருள்பாலித்த அருள்மிகு வில்லூன்றிக் கந்தனுடைய அருட்பாதங்களில் எனது வாழ்த்துச் செய்தியைச் சமர்ப்பணம் செய்கின்றேன்.

**இரா. சம்பந்தன் (பா. உ)**
**தலைவர்**
**வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலய**
**இராஜகோபுரத் திருப்பணிச் சபை**
**திருக்கோணமலை.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மாஹா கும்பாபிஷேக மகிமையும்

## ஆசியுரை

மனநிம்மதி சாந்தியினை நாடும் மக்களுக்கு மனச்சாந்தியினையும் உறுதிமிக்க பொருள்வளம், கல்வி, விஞ்ஞானவளம், மேலோங்கிய ஊருக்கு அழகினையும் அளிப்பன ஆலயங்களே. "திருக்கோவிலில்லாத திருவிலூர்" - என்பது அப்பரது அருள்மொழி. "கோவிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்பது மூதுரை.

இலங்கையின் கீழ்மாகாணத்திலே சமய குரவரான திருஞானசம்பந்தர் சுவாமிகளால் தேவாரப்பதிகம் பாடப்பெற்றதும், அருணகிரிநாதசுவாமிகளால் திருப்புகழ்பாடப் பெற்றதும் தக்ஷிணகைலாசம் எனப் போற்றப்படுவதும் கோணேஸ்வரப்பெருமான் எழுந்தருளியுள்ளதுமான திருக்கோணமலை எனும் நகரிலே இராமபிரான் தனது வில்லை ஊன்றிய காரணத்தால் வில்லூன்றி என்று பெயர்பெற்றதும், இயற்கைத் துறைமுகத்தின் அருகிலே அமைந்துள்ளதுமான ஆலயத்திலே அருள்மழை பொழிந்து வரும் கண்கண்ட தெய்வம் கலியுக வரதனான வள்ளி தேவசேனாசமேத ஷண்முகப் பெருமான் சிவன், அம்மன், மயூரம், பலிபீடம், தம்பப்பிள்ளையார், கறுத்தப்பிள்ளையார், ரங்கநாதர் தண்டபாணி, நாகதம்பிரான், நவக்கிரகம், தனிச் சூரியன், பைரவர் முதலிய பரிவார தேவர்களுடன் அருளாட்சி புரியும் ஆலயத்தினை ஜீர்ணோத்தாரணம் செய்து புதிதாக மிகப்பெரிய பஞ்சதளராஜ கோபுரமும் நிர்மாணித்து மிகக் கோலாகலமாகக் கண் கொள்ளாக்காட்சியாக 13.11.2011 ஞாயிற்றுக்கிழமை நவகுண்டபிஷ மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தமை அனைவரும் அறிந்ததே!

எல்லாம் வல்ல இறைவன் நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம், சூரியன், சந்திரன், இயமானன் எனும் அஷ்டமூர்த்திகளாக உலகெங்கும் நீக்கமற நிறைந்து காட்சி தருகின்றான். இதனை "மூவுருவின் முதலுருவாய் இரு நான்கான மூர்த்தியே" என அப்பர் சுவாமிகளும் "அட்டன் அழகாக அரை தன்மேல் அரவார்த்து" என சுந்தரரும், "போற்றி நின் கருணை வெள்ளப் புது மதுப்புவனம், நீர், தீ, காற்று இயமானன் வான இருசுடர்க் கடவுளானே" என்று மாணிக்கவாச சுவாமிகளும் போற்றியுள்ளதன் மூலம் அறியலாம்.

பரமாகாசம் எனும் அண்டவெளியிலே எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைசக்தியானது வேதமந்திர ஒலி மூலம் வாயுபகவானிடமும் ஆங்கிருந்து பலவிதமான மூலிகைகள், தானியங்கள், சமித்துக்கள், மூலம் சக்திமிகு மந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சாரணத்துடன் ஓமம் செய்து வளர்க்கப்படுகின்ற யாக அக்கினியிலும் பொலிவு பெறுகின்றது. பின் நூல், தர்ப்பைக்கயிறு மூலம் அமையும். நாட்சந்தானம் எனும் தொடர்பு மூலமாக மேடை மீது வைத்துப் பூசிக்கப்படுகின்ற கும்பத்திலுள்ள நீரினையடைந்து மேலும் சக்தியூட்டப்படுகின்றது.

ஓம அக்கினியில் பூசிக்கப்பட்ட திருவருட் சக்தியினை ஒடுக்கிக் கும்பத்தில் சேர்த்து அக்கும்பத்தை – அந்தணர்கள் வேதமோத – நாதஸ்வரக் கலைஞர்கள் நாதாஞ்சலி செய்யப் பக்தர்கள் பக்திப் பரவசத்துடன் திருமுறைகளை மனதாரப் பாராயணஞ் செய்து "அரோகரா" எனும் ஒலி வான் நிறைய ஒலிக்க, வீதிவலம் வந்து கருவறையிலே ஸ்தாபிக்கப்பட்டுள்ள, நில சம்பந்தமான விக்கிரகங்களின் திருமேனிகளின் மீது, கும்பத்தினில் உறையும் திருவருட்சக்தியினை எழுந்தருளச் செய்து அக்கும்ப நீரினை திருவுருவங்களின் மீது சொரிந்து, அபிஷேகஞ் செய்து, அவ்விக்கிரகங்களின் தெய்விகச் சக்தி எனும் உயிர்ச்சக்தி மீதுரப் பெற்று மிளிர்கின்றன என ஆகமங்கள் கூறுகின்றன. இதனையே கும்பாபிஷேகம் விளக்குகிறது.

மேலும் ஓர் ஆலயம் தெய்விக சக்தி நிறைந்து அருளொளி பரப்பிச் சிறப்புற அடிப்படையாக முக்கியம் வாய்ந்த சில காரணிகள் உள.

"அர்சகஸ்ய ப்ரபாவேந, அர்ச்சனஸ்யாப்யதி சயாத் அதிரூபஸ்ய பிம்பஸ்ய, சிலாபவதி தைவிக்" அதாவது சிற்பாசாரியரின் கலையம்சம் மிளிரும் எழில்மிகு திருவுருவங்களின் பொலிவினாலும் முழு ஈடுபாட்டுடன் மனதார அர்ச்சிக்கும் சிவாச்சாரியர்களின் மகிமையினாலும் குருமாரின் மந்திரம், கிரியை, பாவனை, முத்திரைகள், மந்திர உச்சாரண ஒலி ஆகியவற்றினாலும் சாதாரணமான கல், ஐம்பொன் ஆகியவற்றினால் வடிக்கப்பட்ட சிலைகூட தெய்வத்தன்மை பெற்று மிளிரும் என்பது ஆகம வாக்கு. அத்துடன் "உருவேறத் திருவேறும்" என்ற முதுமொழிக்கிணங்க ஆங்கு பக்தர்கள், அடியார்கள் முழுமன ஒருமைப்பாட்டுடன் பிழையறப் பாடிப் பரவும் திருமுறைகளின் ஒலியினாலும் அவ்வாலயம் தெய்வசாந்நித்தியம் தெய்விக ஒளி மிக்கதாக விளங்கும் என்பதும் ஆன்றோர் அருள்மொழி. இவ்வாறு பல உயர்தத்துவக் கருத்துக்கள் நிறைந்த மகாகும்பாபிஷேகத்தை தரிசித்தல் மிகப்பெரிய புண்ணியப் பேறாகும்.

ஆகம விதி முறை தவறாமல் சிறந்த முறையில் மூல மூர்த்தியான ஸண்முகப் பெருமானுக்கு நவகுண்டம், விநாயகர் முதலிய பரிவார தேவர்களுக்கு ஏககுண்ட யாகசாலைகள் ஆறு மேலும் ஆறு ஸ்நபன யாகமாக அமைத்து வேத ஆகம முறைப்படி மந்திர, கிரியா திரவிய லோபமின்றி நிகழ ஸர்வ போதகாசாரியராக காஞ்சிபுரத்திலிருந்து ஆங்குள்ள 108 ஆலயங்களை வழிநடத்தி வருகின்றவரும் காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோவில் கைலாசநாதர் கோவில் ஆகியவற்றின் பிரதான சிவாச்சாரியாரும் பாரத நாட்டில் பல பாகங்களிலும் உள்ள ஆறாயிரம் கோயில் கும்பாபிஷேகங்களில் ஸர்வ போதகராக பணியாற்றியவருமான சைவசித்தாந்த ஆகம ஸாகரம், சிவாகமச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வர் சிவாச்சாரியச் சக்கரவர்த்தி சிவஸ்ரீ சு.ராஜப்பா குருக்கள் அவர்களும் அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணி சிவசுப்பிரமணிய சாமி கோயில் பிரதான சிவாச்சாரியார் சிவாகம பூசணம் K.V.ரவிக்குருக்கள் அவர்களும் இலங்கையிலுள்ள பல உத்தம சிவாச்சாரியர்களும் எங்கள் அழைப்பினை ஏற்று வந்து பங்குகொண்டு சமர்ப்பித்தனர். வில்லூன்றித் தேவஸ்தான ஆதீன கர்த்தாப் பரம்பரைச் சிவாச்சாரியர்கள் அனைவரும் பணிபுரிந்தனர். அவர்கள் அனைவரும் எமது குல தெய்வமாகிய ஷண்முகப் பெருமானின் பரிபூரணமான திருவருளால் சகல நலன்களையும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வேண்டும் எனப் பிரார்த்தித்து எமது ஆசிகளை வழங்குகின்றோம்.

மேலும் இதில் முழுமனதுடன் சிறப்பாக நிகழ ஆவன செய்த வில்லூன்றிக் கந்தன் தேவஸ்தான ஆதினபரம்பரை நிர்வாகி ஸ்ரீ சு.ரா.சுதாகரக்குருக்கள், சிவாகரக்குருக்கள் மணியகாரர்கள் திரு.ஆ.ஆ.ஜெயரத்தினம், திரு.ஞா.கதிர்காமதாசன் அவர்களும் ராஜகோபுரத் திருப்பணிச் சபையினர், கும்பாபிஷேக திருப்பணிச் சபையினர் பொருளுதவி சரீர உதவி முதலிய பணிகளில் ஈடுபட்டு உழைத்த அனைத்து அடியார்களும் பக்தர்களும், தொண்டர்களும் வள்ளி தேவசேனா சமேத ஷண்முகப் பெருமானின்திருவருளால் நோயற்ற வாழ்வு, குறைவற்ற செல்வம், நீண்ட ஆயுள் முதலாம் சகல நற் பேறுகளையும் பெற்று வாழப் பிரார்த்தித்து எமது உளமார்ந்த ஆசிகளையும் வழங்குகின்றோம்.

ஆதீன பரம்பரை சிவாசாரியர்களின் தெய்விகப்பணி மென்மேலும் சிறந்துயர்க! தேவஸ்தான மணியகாரர்களின் அருட்பணி மென்மேலும் வளர்க!!

அடியார்கள், பக்தர்களின் பக்திமயமான தொண்டுகள் ஓங்கிவளர்க!!
"வாழ்க சீரடியாரெல்லாம்"
"லோகாஸ் சமஸ்தாஸ் ஸாகினோ யவந்து"
"உலகமாந்தரனைவரும் இன்புற்று வாழ்க"

**சுபம்**

**வியாகரண சிரோமணி**
**சிவஸ்ரீ. பூரண தியாகராஜக் குருக்கள்**
**கந்தசுவாமி கோவில்**
**வில்லூன்றி, திருக்கோணமலை**

**வியாகரண சிரோமணி (அண்ணாமலை சர்வகலாசாலை) சிவசாரிய கலாநிதி, வேதாகம சைவசித்தாந்த கிரியாவிசாரத, வேதாகம நிபுண சிவாசாரிய சக்கரவர்த்தி சிவஸ்ரீ பூரண தியாகராஜக்குருக்கள்(BA.Hons), வில்லூன்றி கந்தசுவாமி தேவஸ்தான பிரதான சிவாசாரியர், மட்/சிவாநந்தா வித்தியாலய முன்னாள் சமஸ்கிருத இந்து நாகரிக விரிவுரையாளர், பூர்ணானந்த குருகுல வேதசாஸ்திரி ஆகம கலாசாலை அத்யாபகர் வில்லூன்றி கந்தசுவாமி கோவில் மகாகும்பாபிஷேக பிரதான சிவாசாரியா அவர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வில்லூன்றிக் கந்தசுவாமி தேவஸ்தான பரம்பரை நிர்வாகியும் பிரதான குருவுமான வேதாகம பக்தி ரட்ணா ஆகம கிரியா பூஷணம் சிவாச்சாரியமணி சிவஸ்ரீ சுரா.சுதாகரக் குருக்களின்**

# ஆசியுரை



பாரத நாட்டிலே ஆறு படைவீடுகளில் வீற்றிருந்து அருள்புரிகின்ற கலியுக வரதனாகிய கந்தப் பெருமான் கிழக்குக் இலங்கையிலே தஷிணகைலாசமெனும் திரிகோணமலையிலே வில்லூன்றியம் பதியிலே மிகப் புராதன காலமாகக் கோயில் கொண்டெழுந்தருளி அருள் மாரிபொழியும் கண்கண்ட தெய்வமான நம்குலதெய்வமான வள்ளி தேவயானி மேத ஷண்முகப்பெருமானுக்கு மந்திரம், கிரியை, திரவியம் ஆகிய குறையின்றி நிறைவாகப் பக்திமயமாக தலை சிறந்த சிவாசாரியப் பெருமக்களால் மகாகும்பாபிஷேகம் பல்லாயிரக்கணக்கான பக்தர் புடைசூழநிகழ்ந்து இப்போது கும்பாபிஷேக மலர் வெளியிடவுள்ளமை மிக்க மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

"புன்னெறியதனிற் செல்லும் போக்கினைவிலக்கி மேலாம் நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கியாண்ட பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி" எனப் பணிந்து கும்பாபிஷேக மலர் என்றும் வாடாமலராக திக்கெட்டும் மணம் வீசவும் அனைத்து அடியார்களும் சீரும் சிறப்புமாக வாழவும் அருள் புரியுமாறு வேண்டி எமது மனம் நிறைந்த ஆசிதனை அளிக்கின்றேன்.

**சுபம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை



# ஆசியுரை

மலைசூழ நகரும், நகர்சூழ ஆலயமும் கொண்டிருக்கும் தலைக்கடவுளாம் ஈசன் வீற்றிருக்கும், கோணமாமலையின் ஆலயங்களுக்குள் தனிச்சிறப்பும் வரலாற்றுத் தொன்மையும் கொண்டு விளங்கும் வில்லூன்றிப்பதி முருகனுக்கு பஞ்சதள இராஜகோபுரம் அமையப்பெற்று மாகாகும்பாபிஷேகம் நடைபெற்ற இத்தருணத்தில், இவ்வாலயத்தில் மாபெரும் கைங்கரியங்களை நிறைவேற்றித் திருமலையின் சிறப்புமிக்க ஆலயமாக நடாத்திக்கொண்டிருக்கும் மணியக்காரர்களுக்கும், ஆலயத்தில் இடம்பெற்ற பல்வேறு திருப்பணிகளிலும் பங்கேற்று ஆலயத்தின் முன்னேற்றத்திற்கு அயராது பாடுபட்டு வரும் இரா.சம்பந்தன் ஐயா அவர்கட்கும், இவர்களோடு இணைந்து செயற்பட்ட திருப்பணிச்சபையினருக்கும், ஆசிவழங்கி, இவ்வாலயத்தின் தொன்று தொட்டு நித்திய நைமித்திய கிரியைகளைப் பரம்பரையாக நடத்திவரும் ஆதீன குருமார்களுக்கும் ஆசி வழங்கி கடலிலே வேல் ஊன்றி எழுந்த முருகனை படிப்படியாக உயர்த்தி இன்று கோணமலையின் ஒரு சிறப்புமிக்க ஆலயமாக உருவாக்கிய அனைவருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாளும், வில்லூன்றிப் பதியானும் ஆசி வழங்க வாழ்த்துகின்றேன்.

**இங்ஙனம்**
**வேதாகமமாமணி**
**பிரம்மஸ்ரீ. சோ. ரவிச்சந்திரக்குருக்கள்**
**ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவும்,**
**ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

ஆணவ மலத்தினால் மதிமயங்கித் தேவர்களையும், நல்லோரையும் வருத்திய தாரகன், சிங்கமுகன், சூரபத்மன் ஆகியோரை வதஞ்செய்து தேவர்கட்கும் ஏனையோர்க்கும் அபயங்கொடுத்து காத்து நன்நெறியொழுகச் செய்த கலியுக வரதன் கண்கண்ட தெய்வமாய் திருக்கோணமலை வில்லூன்றியம் பதியிலே எழுந்தருளியுள்ள வள்ளி தேவசேனா சமேத சண்முகப் பெருமானின் ஆலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்து புதிதாக மிகப் பெரிய பஞ்சதள ராஜ கோபுரமும் கட்டி மகாகும்பாபிஷேகம் கோலாகலமாக மிகச் சிறந்த முறையில் நிகழ்ந்து மலர் வெளியிடவிருப்பது பெரும் மகிழ்ச்சி தருவதாகும்.

"எம்குல தெய்வமான சண்முகப்பெருமான் இங்கே "இந்திரன் குமரியோர்பால் ஏனையயோர் தம் பாவையோர் பால் சந்தம் இருப்ப வானோர் முனிவரர் அங்கஞ் சூழப் பந்தமத அகலும் தொண்டர் பரிவுடன் குக என்று ஏத்தக் கந்தனாங்கிருந்த மாட்சிக் கழறுதற் கெளிதன்றம்மா" என்று கச்சியப்பர் கூறியபடி, கருவறையில் வீற்றிருக்கும் கந்தன் ஸ்நபன மண்டபத்தின் வலப் புறம் சிவனும், இடப் புறம் அம்மனுடனும் அம்மையப்பனாகக் காட்சி தருவது மிக மிக விஷேட பலன் தருவதாகும் என்பது ஆன்றோர் முதுரை.

"தீவினை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்னுற்றால் தூயவராகி மேலாம் நன்நிலை அடைவர் என்கை ஆயவும் வேண்டும். கொல்லோ! அடுசமர் இன்னாட் செய்த மாயையின் மகனுமன்றோ. வரம்பிலா வருள் பெற்றுய்ந்தான்" என்றபடி முருகனுடன் கடும் போர் புரிந்த சூரனும் முருகன் கடைக்கண் நோக்கால் ஆணவமயமான சூரனை மயிலாக்கி அதன் மீது வீற்றிருந்தும், ஞான மயமான பதுமனை சேவலாக்கி கொடியில் உயர்த்தியும் கந்தனை வணங்கும் போது அவர்களையும் வணங்கும் பெரும் பேற்றினை அளித்துள்ளார். இம் மாபெரும் பேறு வேறு யாருக்குத்தான் கிடைக்கும்.

எனவே நாமும் நாள் தோறும் வில்லூன்றிக் கந்தனை தரிசித்து வணங்கி அவனருளாலே சகல நலங்களையும் பூரணமாகப் பெற்று ஆனந்த வாழ்வு வாழ்வோமாக என்று கந்தனைப் பிரார்த்தித்து மலர் என்றும் வாடா மலராக பாரெங்கும் மணக்க ஆசி கூறுகின்றேன்.

**பூ. சுந்தரேஸ்வர ஐயர்**
**இல. 111/17 வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் வீதி**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி தேவஸ்தான சிவாசாரியரும்
லண்டன் முருகன் கோயில் பிரதம குருவுமான
சிவஸ்ரீ சிவ.சச்சிதானந்தேஸ்வர குருக்கள் அவர்களின்



# ஆசியுரை

சூரனுடன் போரிடும் முருகனை சிறுகுழந்தை என அலட்சியம் செய்த சூரனுக்கு விஸ்வரூபம் காட்டி சிறிது நேரம் நல்லுணர்வையும் நல்கினான் ஷண்முகப்பிரான். அப்போது எதிரியான சூரனின் வாயிலிருந்து "கோலமா மஞ்சை தன்னில் குலவிய குமரன் தன்னை பாலன் என்றிருந்தேன். அந்நாட் பரிசிவையுணர்ந்திலேன் யான் மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும் மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தியன்றே!" என்று வியக்கும் வார்த்தைகள் வெளிவந்தன. அவை மட்டுமா..........

"ஆயிரம் கோடி காமர் அழகெலாம் திரண்டு ஒன்றாக்கி மேயின எனினும் செல்வேன் விமலமாம் சரணம் தன்னில் தூய இவ்வெழிலுக்காற்று தென்றிடின் இளைய தொல்லோன் மாயிருயாக்கைக்கெல்லாம் உவமை யார் வகுக்க வல்லார்"

"ஆயிரம் கோடிக்கணக்கான மன்மதன்களின். அழகை எல்லாம் திரட்டிச் சேர்த்து ஒன்றக்கிப்பார்த்தாலும் இச்சிறு குழந்தை ஷண்முகரின் கால் தூசிக்கு இணையாகாதே"! என்று ஆச்சரியத்துடன் கூறுகிறன் எனில் முருகன் உருவ அழகு எத்தகையது! கூற முடியுமா! இத்தகைய ஷண்முகப்பெருமான் எழுந்தருளி அருள் பாலிக்கும் வில்லூன்றி கந்தன் ஷண்முகப்பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் நிறைவுற்று இரவு திருவீதிப்பவனி வந்த ஷண்முகரும் இதே பேரழகுடன் மிளிர்ந்தாரன்றே! அத்தகைய எமது குலதெய்வம் பக்தர்கள் அனைவருக்கும் நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் முதலிய சகல நன்மைகளையும் வாரி வழங்குவாராக என்று வேண்டி எமது நல்லாசிகளையும் வழங்கி நிறைவு செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



"கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே" என்பது தேவாரம். திருக்கோணமலையில் இந்துக் கோயில்கள் ஏராளம். அவற்றுள் வில்லூன்றிக் கந்தசுவாமி கோயிலும் ஒன்று. நகரத்தின் மத்தியில் உள்ள இந்த ஆலயம் மிகப் பழமையானது. இதற்கு நீண்ட வரலாறும் உண்டு.

இவ்வாலயத்தில் கந்த சட்டி விரதம், லட்சார்ச்சனை, ஆண்டுத்திருவிழா திருவெம்பாவை ஆகியன மிகச்சிறப்பாக நடைபெறும். ஆயிரக்கணக்கான மக்கள் வந்து வழிபட்டு முருகன் அருள் பெற்றுச் செல்வார்கள். மிகப் பெரிய இராஜகோபுரம் அமைந்து கும்பாபிஷேகம் நடைபெற்று மண்டலாபிஷேகம் நடந்து கொண்டிருக்கிறது.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று", "காலையும் மாலையும் கடவுளைத் தொழு", "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்றெல்லாம் பழமொழிகள் உள. கோயிலுக்கு அடிக்கடி சென்று வழிபடுவதால் எங்களுக்குக்கடவுள் மேலுள்ள பக்தியும் நம்பிக்கையும் அதிகரித்து ஆத்மீக வாழ்வு மலர்கிறது கோயிலுக் கென்றால் அள்ளிக் கொடுக்கும் பழக்கம் பலரிடையே காணப்படும் இக்காலத்தில் கோயில்களை ஒழுங்காக நடத்தினால் கூடிய வருமானம் கிடைக்கும் . அதைக் கொண்டு கோயில் செலவுகள் போக மீதிப்பணத்தை அயலில் உள்ள மக்களின் நன்மைக்குச் செலவு செய்யலாம். கிராமத்துப் பாடசாலைகளில் படிக்கும் ஏழைப்பிள்ளைகளுக்கு உதவலாம். வாசிக சாலைக்குப் புத்தகங்கள் உதவலாம். கோயிலில் அறநெறிப்பாடசாலை, சமய வகுப்புகள். கூட்டுப் பிரார்த்தனை சமயப் பிரசங்கள் ஆகிய சேவைகளைச் செய்யலாம்

ஒருகிராமத்தில் பாடசாலையும் ஆலயமும் நூல் நிலையமும் ஒழுங்காக நடைபெறுமானால் அக்கிராமம் முன்னேற்றமடையும் பணம் சம்பாதிப்பதை இலக்காகவைத்து படிக்கக்கூடாது. கடவுள் பக்தியும் ஒழுங்கமான வாழ்வும் சமய அறிவும் சேர்ந்த கல்வியே மக்களை மக்களாக வாழ வழிகாட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழையும் சைவத்தையும் கட்டிக்காத்த ஆறுமுகநாவலர் பெருமான் "மனிதப் பிறவியின் நோக்கம் கடவுளை அடைதலே ஆகும்." என்று அருளி உள்ளார்கள். கடவுளை அறிந்து கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

பக்கத்தில் பல வருடங்களாக இயங்கி வரும் ஸ்ரீ முருகன் தொண்டர் சபை எல்லாவற்றிலும் பங்குபற்றிச் சிறப்பிப்பது பாராட்டுவதற்கும் போற்றுதற்கும் உரிய சேவையாகும்.

ஆலயம் சீரும் சிறப்புமாக நடைபெற்று மக்கள் வாழ்க்கையை மலரச் செய்ய எல்லாம் வல்ல முருகப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

ஆனந்தம்.

**பொ.கந்தையா**
**(காந்தி ஆசிரியர்)**
**முத்துக்குமார சுவாமி கோவிலடி**
**திருக்கோணமலை**
**17.12.2011**

**கடவுளை அடையக் கடைபிடிக்க வேண்டிய வழிகள்**

- சமய அறிவைப் பூரணமாக பெறுதல்
- இறைவன் வீற்றிருக்கும் ஆலயங்களைத் தரிசனம் செய்தல்
- மனித சமுதாயத்திற்குத் தான, தருமம், தொண்டுகள் செய்தல்
- தன்னைப் போல மற்றவர்களையும் மதித்து முடிந்தளவு அவர்களுக்கு தொண்டு செய்தல்.
- எல்லா உயிரினங்களுக்கும் (விலங்குகள், பறவைகள் உட்பட) இடர் செய்யாது அன்பு செலுத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையில், வில்லூன்றி என்னும் புனிதபதியில் கோயில்கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கின்ற வள்ளி தெய்வானை சமேத சண்முகப் பெருமானுக்குக் கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது. 1762ம் ஆண்டு தமிழ் நாட்டில் திருவேரகம் என்னும் இடத்தில் இருந்து கப்பல் மூலம் திருக்கோணமலையை வந்தடைந்த எம்பெருமான் 1809ம் ஆண்டு வில்லூன்றியில் கோயில்கொண்டு எழுந்தருளினார். முதலாவது கும்பாபிஷேகம் 1813ம் ஆண்டு ஆவணி மாதம் நடைபெற்றது.

200 வருடங்களுக்கு மேலாக வில்லூன்றியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் வள்ளி, தெய்வானை சமேத சண்முகநாதப் பெருமானுக்கு இராஜகோபுரம் அமைக்க அடியார்கள் எண்ணி, 2004ம் ஆண்டு திரு.இரா.சம்பந்தன் (பா.உ) தலைமையில் இராஜகோபுரத் திருப்பணிச்சபை அமைத்துச் செயல்பட்டார்கள். திருக்கோணமலை வில்லூன்றி இராஜகோபுரத் திருப்பணிச் சபையினர் இரவு, பகல் பாராது செயல்பட்டமையும், அடியார்கள் பணத்தை வாரி வாரி வழங்கியமையும் எம்பெருமானின் ஆலயவாசலில் இராஜகோபுரம் நிமிர்ந்து நிற்பதற்குக் காரணமாயின. வரலாற்றுப் பெருமை பெற்ற இவ் ஆலயத்திற்கு எம் முன்னோரால் அளிக்கப்பட்ட சொத்துகளையும் ஆதாரங்களையும் பாதுகாப்பதும், மேம்படுத்துவதும் சைவ அன்பர்களாகிய எங்கள் எல்லோரதும் தலையாய கடமையாகும். அடியார்கள், அன்பர்களால் அளிக்கப்படும் மேம்பாட்டு நிதி, திருப்பணி நிதி ஊடாக பல திருப்பணிகளை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. இந்த நேரத்தில் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இராஜகோபுரம் அமைப்பது என்பது எவ்வளவு கஷ்டமான காரியம் என்பது இப்புனிதபணியில் ஈடுபட்ட அனைத்து அடியார்களும் அறிவார்கள். இப் பெரும்பணி சிறப்பாக நிறைவேறியதற்கு வில்லூன்றிக் கந்தனின் திருவருளேயன்றி வேறொன்றுமில்லை. இராஜகோபுர வேலைகள், ஆலய பண்டிகைகள் திருத்தவேலைகள் மற்றும் பல திருப்பணி வேலைகள் நிறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டு இன்று ஆலயம் புதிய பொலிவுடன் 13.11.2011ம் திகதி மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளதை எண்ணிப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எம்பெருமானின் திருவருள் குறிப்பினால் தானாகவே முன்வந்து இராஜகோபுரத்தைக் சிறப்பாக அமைத்துத் தந்த காரைக்கால் திரு.கலியப்பெருமாள் விஜயன் ஸ்தபதிக்கு என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இராஜகோபுர, கும்பாபிஷேகப் படங்களையும், சம்பவங்களையும் மலரில் இடம் பெறச் செய்வதினால் எதிர்காலச் சந்ததியினரின் உள்ளத்தில் எழுச்சியையும், மகிழ்ச்சியையும் மலரச் செய்யலாமென்ற தீர்க்க சிந்தனையோடு திருப்பணிச் சபையினர் கும்பாபிஷேக மலரை மண்டலாபிஷேக பூர்த்தியின் போது வெளியிடுகிறார்கள்.

இராஜகோபுரம் அமைப்பதிலும், திருப்பணி நிதிசேகரிப்பதிலும் மகா கும்பாபிஷேகத்தைச் செய்வதிலும் முன்னின்ற சிவாச்சாரியப் பெருமக்கள், திருப்பணிச்சபைத் தலைவர் உறுப்பினர்கள், அன்பர்கள்,தொண்டர்கள் சிற்பாச்சாரியார்கள் மற்றும் ஏனையோருக்கும் எனது நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஆ.ஆ.ஜெயரத்தினம்**
**[நிர்வாக மணியகாரர்]**
**வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில்**
**திருக்கோணமலை**

## மார்கழி மாதச் சிறப்பு

மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற்காலம். இந்தச் சிறந்த மார்கழியில் விடியற்காலை வழிபாடு செய்வதால் அப்பயனுக்குக் கோடித் தினம் பூஜித்த பயனும்நிகர் ஆகாது என்று சிவாகமம் சொல்கின்றது. ஆகையால் மார்கழி மாதம் விடியற்காலையில் நீராடி இல்லத்திலோ ஆலயத்திலோ பூஜை செய்வோருக்கு எல்லா நலன்களும் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

திருக்கோணமலையில் அமைந்திருக்கும் ஆலயங்களில் பழமையும், புதுமையும் கொண்ட ஆலயமாக வில்லூன்றிக் கந்தன் ஆலயம் திகழ்ந்து வருகின்றது. 1994ம் ஆண்டு எனது தந்தையார் காலத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. 2004ம் ஆண்டு அடியார்கள் எமது ஆலயத்திற்கு இராஜகோபுரம் அமைப்பதற்கு எண்ணி முயற்சிகளில் ஈடுபட்டார்கள். ஏழு வருடங்களின் பின் இராஜகோபுரத் திருப்பணிச்சபையினரின் அயராது உழைப்பினாலும், அடியார்களின் நன்கொடைகளினாலும் எம்பெருமானுக்கு இராஜகோபுரம் அமைக்கப்பட்டு (13.11.2011ம் திகதி)மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுவதற்கு அருள்பாலித்த விநாயகப் பெருமானையும் முருகப்பெருமானையும் பணிந்து போற்றி மகாகும்பாபிஷேகம், இராஜகோபுரத் திருப்பணிகள் சிறப்பாக நடைபெற திருப்பணிகளை மேற்கொண்ட இராஜகோபுரத் திருப்பணிச்சபையினருக்கும் சிவாச்சாரிய பெருமக்களுக்கும் அடியார்களுக்கும் எனது நன்றியுடன் கூடிய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஞா. கதிர்காமதாசன்**
**நிர்வாக மணியக்காரர்.**
**வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில்,**
**திருக்கோணமலை.**

### கற்பூரம் எரிப்பதன் தத்துவம்

கற்பூரம் எரியும்போது கரியோ, சாம்பலோ இல்லாமல் மறைந்து விடுகிறது. அதுபோல ஆன்மா இறைவனுடைய அருட்சோதியில் கரைந்து ஒன்றுபட வேண்டும் என்ற குறிப்பை கற்பூரம் உணர்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையை தற்கோல நாடோறும் சாற்றினால் - முற்கோல மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித் தானீந்த வெல்லாம் தரும்.**



இவ்வாழ்த்துப்படையை முக்காலமும் ஓதுவார் தாம் வேண்டிய வரங்களைப் பெற்று முருகப்பெருமானின் திருவடியை அடைந்து பேரின்பப் பேறு எய்துவார்கள்.

இவ்வாலயத்தின் கோபுரம் கட்டுவதற்கு முன்னோடியாக நின்றவரும், கோயிலை இந்நிலைக்கு கொண்டுவர வேண்டுமென நின்றவருமாகிய மணியக்காரர் திரு.ஆ.ஆ.ஜெயரெட்ணம் அவர்களையும், நாம் வேலையைத் தொடங்குவதற்குப் பணம் போதாது இருந்தபொழுது முருகன் தருவாரென ஊக்கமளித்து தொடர்ந்து வேலையைச் செய்யுங்கள் எனக் கூறிய திருப்பணிச்சபைத் தலைவர் திரு.ஆர்.சம்பந்தன் (பா.உ) அவர்களையும் எம்மால் மறக்க முடியாது.

அத்துடன் எமக்கு பொருள், பணம், சரீர உதவி எனப் பல வழிகளிலும் பணம் சேகரித்த திருப்பணிச் சபை அங்கத்தவர்களுக்கும் ஏனைய உதவிகளைச் செய்த அங்கத்தவர்களுக்கும் எம்முடன் இணைந்து உதவியவர்களும் எமது நன்றி உரித்தாகுக. என்னுடன் இணைந்து செயலாற்றியவர்கள், தொண்டர்கள், தொழிலாளர் ஆகியோரின் நேர்மையை நான் பாராட்டாது இருக்க முடியாது.

**எல்லோரும் வாழ்க**

**சுப்பையா குருக்கள் திருஞானசம்பந்தர்**
**இராஜகோபுரத் திருப்பணிச் சபை [பொருளாளர்] வில்லூன்றி**

## தேங்காயின் தத்துவம்

| | |
|---|---|
| புற ஓடு | உலகமாயை |
| உள்ளீடு | பரம்பொருள் |
| இளநீர் | திருவருள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பழமையும், புதுமையும் வாய்ந்த திருக்கோணமலை வில்லூன்றி என்னும் இடத்தில் தானாகவே விரும்பி வந்து வீற்றிருந்து அருள்பாலிக்கின்ற வள்ளி, தெய்வானை சமேத சண்முகநாதப் பெருமானுக்கு புதிய இராஜகோபுரம் அமைத்து மகாகும்பாபிஷேகம் 13/11/2011 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அந்தக் கண்கொள்ளாக் காட்சியை காணக்கிடைத்தமை, முற்பிறப்பில் நாம் செய்த புண்ணியத்தின் பயனன்றோ! நாம் வாழ்கின்ற காலத்தில் முன்னோர்கள் செய்யாத ஒரு இராஜகோபுரத்திருப்பணியை வில்லூன்றியான் திருவருளுடன் அடியார்கள் செய்து முடித்து இருக்கின்றார்கள். தான் நினைத்ததை நாம் இறை சிந்தனையோடு வேண்டும் நேரத்தில் அதற்குரிய வரத்தை எமக்கு வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றார் சண்முகநாதப் பெருமான்.

திருப்பணிச் சபைத் தலைவர் திரு.இரா.சம்பந்தன் (பா.உ) ஐயாவின் பெரு முயற்சியும் திருப்பணிச்சபையினரின் இரவு பகல் பாராத சேவையும், அடியார்கள் வாரி வாரி வழங்கிய நன்கொடைகளுமாக எம்பெருமானின் திருக்கோயில் வாசலில் கம்பீரமாக சிற்பவேலைப்பாடுகளுடன் கூடிய ஐந்து தள இராஜகோபுரம் அமைந்துள்ளது. "கோபுரதரிசனம் கோடி புண்ணியம்" என்பதற்கமைய இதனை ஏற்படுத்திக்கொடுத்த அனைவரையும் இப்புண்ணியம் சாரும்

இப்புனித பணியைச் சிறப்பாக நிறைவேற்றிய இராஜகோபுரத் திருப்பணிச்சபையினர், அடியார்கள், சிவாச்சாரிய பெருமக்கள், ஸ்தபதி திரு.க.விஜயன், சிற்பாச்சாரியார்கள், மற்றும் அனைவருக்கும் எல்லாம் வல்ல வில்லூன்றிக்கந்தனின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு எமது வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நன்றி**

**இவ்வண்ணம்**
**ந.செல்வஜோதி**
**கௌரவ செயலாளர்**
**ஸ்ரீ முருகன் தொண்டர் சபை**
**வில்லூன்றி, திருக்கோணமலை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலய இராஜகோபுரத் திருப்பணிச்சபை உறுப்பினர்கள்.

போஷகர்கள் :- சிவஸ்ரீ பூரண தியாகராஜக் குருக்கள்
சிவஸ்ரீ பூரண சுந்தரேஸ்வர ஐயர்
சிவஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்

ஆலய ஆதின குரு :- சிவஸ்ரீ.சுரா.சுதாஹரக் குருக்கள்
சிவஸ்ரீ.சுரா.சிவஹரக் குருக்கள்

மணிய காரர்கள் :- திரு.ஆ.ஆ.ஜெயரெட்ணம்
திரு.ஞா.கதிர்காமதாசன்.

1. தலைவர் :- திரு.இரா.சம்பந்தன் (பா.உ)

2. உபதலைவர்கள் :- திரு.து.சண்முகநாதன்
திரு.பொ.விக்கிரமநாயகம்
திரு.கனக மகேந்திரா
திரு.க.தெய்வேந்திரம்

3. இணைச் செயலாளர்கள் :- திரு.ந.செல்வஜோதி
திரு.கு.சிவமூர்த்தி

4. இணைப் பொருளாளர்கள் :- திரு.சி.முருகையா (அமரர்)
திரு.சு.திருஞானசம்பந்தர்
திரு.ஞா.சுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நிர்வாக சபை உறுப்பினர்கள் :-

திரு.க.கனகராசா
திரு.கி.இராஜரெத்தினம்
திரு.செ.நற்குணம்
திரு.ப.நாகரெத்தினம்
திரு.சி.மகேஸ்வரன்
திரு.ச.சசிகரன்
திரு.ஏ.குகப்பிரியா
திரு.ச.வீரசிங்கமணி
திரு.வே.ஏகாம்பரம்
திரு.க.யோகானந்தம்
திரு.யோ.இராஜ்குமார்
திரு.சி.ஜீவானந்தம்
திரு.செ.சித்திரவேல்
திருமதி.வீ.உதயகுமார்
திரு.ஜெ.பாலேந்திரன்
திரு.து.விமலசேகரம்
திரு.நா.செந்தில்குமரன்
திரு.அ.மகேஸ்வரன்
திரு.இ.ஏகாம்பரம்
திருமதி.நா.சண்முகராசா
திருமதி.சு.யோகமணி
திருமதி.பீ.கீர்த்திதாஸ்
செல்வி.வி.சின்னப்பு
திரு.ந.ஸ்ரீதரன்
திரு.பா.திருக்குமரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னை ஆட்கொண்ட வில்லூன்றியான்

நான் இந்தியாவில் இருந்த நேரம் எனக்கு இலங்கைக்கு செல்ல வேண்டிய எண்ணம் ஒன்று உருவானது. எனினும் எனக்கு எவ்வித வேலைகளும் இருக்கவில்லை. நான் இலங்கை வந்து தங்கியிருந்த நேரத்தில் யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்காக நான் விமானம் மூலம் யாழ்ப்பாணம் செல்வதற்கான ஏற்பாடுகளை செய்தபோது தொடர்ந்தும் தடை ஏற்பட்டது. இதனால் கப்பல் மூலம் யாழ்செல்வதற்காகத் திருகோணமலையை வந்தடைந்தேன்.

நான் திருமலை வந்து நீதிமன்ற வீதியில் இருந்த விடுதியிலே தங்கியிருந்தபோது கோயில் செல்லவேண்டி அவ்விடுதி உரிமையாளர்களிடம் கேட்டபோது அவர்கள் வில்லூன்றி ஆலயத்தை காட்டினார்கள். நான் வில்லூன்றிக் கந்தன் ஆலயத்தில் வழிபாடு செய்துகொண்டிருந்தபோது முன்பின் அறிமுகமில்லாத ஒருவர் என்னிடம் வந்து நீங்கள் இந்தியாவில் கோபுர வேலைகள் செய்பவரா என்று கேட்டதுடன், என்னை நாமக்கல் மாவட்டத்தில் கண்டதாகவும் கூறினார். அத்துடன் இந்த கோயிலிலும் இராஜகோபுரம் கட்ட இருப்பதாகவும் கூறி, என்னை ஆலய மணியகாரர் ஜெயரெட்ணம் ஐயாவுக்கு அறிமுகம் செய்து வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்.

பின்னர் நான் மணியக்காரரிடம் கலந்துரையாடி இராஜகோபுரம் அமைக்கும் வேலைகளை 14.07.2008ம் அன்று அடிக்கல் நாட்டு விழாவுடன் இனிதே ஆரம்பித்தோம். வில்லூன்றிக் கந்தனுக்கு அமைக்கப்பட்ட இராஜகோபுரமானது 50 அடி உயரமானதும் கீழ்ப்பகுதி 26 அடி அகலமானதும் தென்பகுதியும் வடபகுதியும் 16 அடி அகலமானதும் ஆகும். இது பஞ்சதளங்களை கொண்டு அமைந்துள்ளது. இது 225 சிற்பங்கள் கொண்டு அமைந்துள்ளது.

இக்கோபுரம் விநாயகர், முருகன், கோடி பூதங்கள், மஹா விஸ்ணு, ஈஸ்வரன், ஈஸ்வரி, வள்ளிதிருமணம், மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமணம், பத்மாவதி திருமணம், தெய்வானை திருமணம், கண்ணப்ப நாயனார் வரலாறு, விநாயகருக்கு கனி கொடுத்த வரலாறு, முருகனுக்கு வேல் கொடுத்த வரலாறு, ஆறுமுகன், சூரசம்ஹாரம், நடராஜர், தட்சணாமூர்த்தி, பிரம்மா,துவார பாலகர்கள், வீரவாகு தேவர், வீர மஹேந்திரன், தண்டாயுதபாணி, தந்தைக்கு உபதேசம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அன்னை அபிராமி, இராஜ கோலத்தில் முருகன், கோபுரம், தாங்கிகள், அர்த்தநாரீஸ்வரர், சங்கரநாராயணன், விசாலாட்சி, இந்திரன், சந்திரன், சூரியன், சிவலிங்கம் போன்ற சிற்பங்களைக் கொண்டுள்ளது. இச் சிற்பங்கள் நவீன முறையில் அமையப்பெற்றுள்ளன. இவ் விராஜகோபுரமானது 10 மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டது.

இதில் என்னுடன் பணியாற்றிய சக பணியாளர்கள் கடும் உழைப்புடன் இதில் பணியாற்றினர்.

இக்கோபுரத்தைச் சிறந்த முறையில் அமைப்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய ஆலய மணியக்காரர் ஜெயரட்ணம் ஐயா ஆலய திருப்பணிச்சபைத் தலைவர் திரு.சம்பந்தர் ஐயா. ஆகியோருக்கும் எம்மை நன்றாகக் கவனித்துக்கொண்ட செல்வஜோதி ஐயா, கனகராஜா ஐயா ஆகியோருக்கும், வில்லூன்றி இளைஞர்களுக்கும், இராஜகோபுர திருப்பணிச் சபையினருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன் என்னை ஆட்கொண்ட வில்லூன்றியானுக்கு என்றும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

**திரு. கலியப்பெருமாள் விஜயன்,**
**பாண்டிச்சேரி மாவட்டம்**
**காரைக்கால்,**
**தமிழ்நாடு – இந்தியா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "கந்தன் கைவேலின் மகிமை"

வேல்முருக பக்தர்களின் உபாசனையில் உள்ள சிறப்பான அம்சம் என்ன தெரியுமா? முருகனை விட அவனது ஆயுதமான வேலாயுதத்திற்கே முக்கியத்துவம் கொடுப்பது. மிக எளிதிலே மனதிலே பதியக்கூடிய உருவமாக, அதே நேரத்திலே "ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" என்றபடி கீழ்ப்பகுதி மிக நீளமாகவும். நடுவிலே அகன்று உச்சிப்பகுதியில் கூர்மையாகவும் விளங்குகின்றது சக்திவேல். வேல் வேல் என்ற வேளையில் பண்டிதன் முதல் பாமரன் வரை எல்லோரும் அடைகின்ற பக்தியின்பம் சொல்லிப்பார்க்கும் போது அவனுடன் ஒன்றிப்போய்விடுகின்றது என்பதனையும் உணரலாம். இதனையே "கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று உய்வாய் மனமே" என்று அருணகிரியார் நமக்கு "முருகன் திருவடிகளைப்பெற விரும்புவீர்களாயின், முதன்முதலிலே அவனுடைய திருக்கரத்திலே வாய்க்கப் பெற்ற ஒளி வீசும் வேலை வணங்குங்கள்" என்று நல் வழிகாட்டுகிறார்.

தோகைமேலுலாவும் கந்தன் சுடர்க்கரத்திருக்கும் வெற்றி வாகையே சுமக்கும் வேலையே வணங்குவது என்று பாரதியாரும் "தனது வேலை என்றும் வேலை வணங்குவது தான்" என வலியுறுத்துவதும் நினைவிற்கொள்ளத்தக்கதே. இவ்வாறு கந்தனின் கைவேலுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் சகலவிதமான உபசாரப் பூசைகளையும் செய்து அதையே எல்லாமாக எண்ணி அவ்வேலாயுதப் பெருமானுக்குத் தனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து படிப்படியாக முன்னேறி மனவடக்கம் எய்தி வாழுகின்ற அடியார்கள் எங்கும் எல்லா ஊர்களிலும் வாழ்வதனையும் பார்க்கின்றோம்.

ஆதிசங்கரர் புஜங்கத்திலே "ஸ்வார்த்த தானே குஹாத் தைவ மன்யம் நஹாநே" விரும்பிய பொருள் அனைத்தையும் வழங்குவதில் கந்தனைத் தவிர வேறு ஒரு தெய்வத்தையும் அறியேன்" என்று கூறியது போல் பெரும்பாலான மக்களும் - பாமரர்கள் உட்பட்ட எல்லோரும் வழிபடும் கடவுள் நினைத்த மாத்திரத்திலேயே நினைத்த காரியத்தை பூரணமாக நிறைவேற்றி தருகின்றவன் முருகன் ஒருவனே!. இவரைத் தவிர வேறொரு தெய்வத்தை அறியேன் அறியேன்!! என்று ஆதிசங்கரர் கூறியது உண்மையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் **"சக்தே பஜேத்வாம் ஜகதோ ஜநித்ரீம்"** என்ற சுலோகத்திலே ஆதிசங்கரர் எறும்பு முதல் பிரம்மா வரை உள்ள அனைத்துயிரையும் ஈன்ற அன்னை ஆதிபராசக்தியே முருகனின் கைவேலாகக் காட்சி தருகிறாள், என்று வர்ணித்துப் போற்றியுள்ளார். இச்சை செயல் இரண்டும் வள்ளி தெய்வானை அம்மையாகவும், ஞானம் கைவேலாகவும் கொண்டவன் கந்தன். தன்னுடைய ஞான சக்தியை வழிபடுகின்றவர்களுக்கு துன்பங்களை நீக்கி மெய்ஞ்ஞானத்தையும் அருள் பாலிக்கின்றான்.

இக்கலியுகத்திலே இப்பூவுலகினைக் காத்து இரட்சிக்கும் பொறுப்பை ஏற்றிருப்பவன் கந்தன். அவருடைய இம்மாபெரும் பொறுப்பிலே பூரணமாகப் பங்கு பெறுகின்றாள் வேலாக இருக்கும் அன்னை பராசக்தி. சிவசக்தி ஐக்கியத்தின் சின்னமாக விளங்கும் வேலுக்கு முக்கியத்துவம் கொடுத்து கந்தனை வழிபடும் அடியவர்கள் கணக்கிலடங்கார். அவ்வேலை நினைத்த மாத்திரத்தே நோய் நொடிகள் அகலும் என்ற முழுநம்பிக்கையுடன் வேல் ஒன்றை மட்டுமே தமது பூஜையில் வைத்து வழிபடும் முருக உபாசகர்கள் நேர்மை, சத்தியம், தர்மம், ஒழுங்கு, பண்பு, சீவகாருண்யம் போன்ற நற்குணங்களின் இருப்பிடமாகவும் இருந்து வருகின்றார்கள். அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் இடையூறுகளைச் சமாளித்து தடம் புரண்டு தப்புவழியில் செல்லும் சந்தர்ப்பம் வரும் வேளையில் இவர்கள் பூசிக்கும் சக்திவேல் அவர்களைத் தடுத்தாட்கொண்டு நேர்வழியில் திருப்பிவிடக் கூடியது என்பதை அவர்கள் உணருகின்றார்கள்.

**"குன்றமெறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும் அன்றங்கே அமரரிடர் தீர்த்ததுவும் - இன்றெம்மைக் கைவிடாது நின்றதுவும் கற்பொதும்பிற் காத்ததுவும் மெய்விடா வீரன் கைவேல்"[நக்கீரர்]**

கிரௌஞ்ச மலையைத் தாக்கி, கிரௌஞ்ச அசுரருடன் போரிட்டு அழித்து அங்கு அகப்பட்டிருந்த தேவர்களின் துயர்களைந்ததும் இன்று என்னைக் கைவிடாமல் காத்து நின்றதுடன், கற்குகையிலே அகப்பட்டுத் துன்புற்ற என்னைக் காத்து அருள் புரிந்ததும் வீரனாகிய குமரப்பெருமானின் கையிலுள்ள வேலாயுதமே" என்று நக்கீரர் விதந்து ஏத்துகின்றார்.

இதனால் முருகனடியார்கள் எந்தக் கோயிலுக்குக் கூட்டமாகச் சென்றாலும் தங்கள் உபாசனைத் தெய்வமான கந்த வேளை **"வெற்றிவேல் முருகனுக்கு அரோஹரா"** என்று குமரி முதல் இமயம் வரை எதிரொலிக்க மெய்சிலிர்க்கக் கூவி அழைக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆகத்தை நீக்கும் ஆண்டவன்

உபாசிக்கும் அடியார்கள் தமது உபாசனைத் தெய்வத்தை எவ்வளவு பக்தியோடும், சிரத்தையோடும் போற்றிப்பாதுகாத்து வருகிறாரோ, அவ்வளவுக்கு மேல் இரட்டிப்பாக அந்தத்தெய்வம் தம்மைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையோடு கொள்கைகளை வகுத்துக்கொண்டு வழிபாடு செய்துகொண்டு வருவதாலேயே உலகின் கண் பக்தி மார்க்கம் சிறிதும் குன்றாமல் இன்றுவரை இருந்து வருகின்றது.

அகந்தையின் இருப்பிடமான மனிதன் அது தெய்வசந்நிதியில் மட்டுமே செயலிழந்தும், மறைந்தோடியும் போவதை உணருகின்றான். அவன் கையெடுத்துக் கும்பிடாமல் இருப்பான். நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்காமலிருப்பான் முருகா என்று, "ஓம் ஹரஹா என்று கன்னத்தில் போட்டுக்கொள்ளா மலுமிருப்பான். ஆனால் முருகன் சந்நிதியில் இவை எல்லாவற்றையும் அவனுள்ளம் அவனையறியாமல் செய்து கொண்டிருப்பதனை உணரத்தவற மாட்டான். இத்தகைய ஒரு நிலை ஏற்படும்போது அகந்தை, அஹம்பாவம் அவனை விட்டு அகன்று விடுகின்றது. இந்த நிலையுண்டாக அவனை வழிபடும்போது நிலவும் பொறுமை பெருமளவு நமக்கு உதவுகின்றது. இதனையே அருணகிரி "பொறையாம் அறிவால் அறிவாய் அடியோடும் அகந்தையே" என்று தனது அனு பூதியில் கூறிகின்றார்.

**"குற்றம் எறிந்தாய் குரைகடலிலும் சூர்தடிந்தாய் புன் தலையர் பூதப் பொருப்படையாய் – என்றும் இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே உளவாய் என் உள்ளத்துள் உறை"**

கிரௌஞ்ச மலையைப்பிளந்தவனே! பாரிய கடலிலே நின்ற சூரபத்மனின் மார்பு பிளந்தாய்! பூதப்படையை உடையானே! என்றும் இளமையுடன் மிளிர்பவனே! அழகனே! காளை வாகனனான சிவனாரின் திருமகனே! என் உள்ளத்திலே என்றும் வீற்றிருந்து அருள் புரிவாயாக!

"வீரவேல் தாரைவேல். விண்ணோர் சிறை மீட்ட தீரவேல். செவ்வேள் திருக்கைவேல் - வாரி குளித்த வேல், கொற்ற வேல், சூர்மார்பும் குன்றும் துளைத்த வேல் உண்டே துணை" எனப் போற்றிப் பணிந்து அவனருளாலே நோயற்ற வாழ்வு, குறைவற்ற செல்வம், மனச்சாந்தி முதலிய சகல பேறுகளையும் பெற்று பூரணமான ஆனந்த வாழ்வு பெற முயலுவோமாக.

சுபம்.

**"ஆகமகிரியா ஜோதி சிவாசாரிய திலகம்"**
**பிரமஸ்ரீ தியாக கமலராஜக் குருக்கள். [ரவி ஐயா]**
**மட்/மாரியம்மன் கோவில் விஷேட சிவாசாரியர்**
**பயிற்றப்பட்ட கணித, ஆங்கில ஆசிரியர் அவர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை அருள் மிகு வில்லூன்றிக் கந்தசாமி கோவில் வரலாறு – 2011

கிழக்கிலங்கையில் பாடல் பெற்ற திருத்தலமாக விளங்குவது திருக்கோணேசர் ஆலயம். சிவனுக்கோர் திருத்தலமாக இவ்வாலயம் மிளிர்வதைப் போல சக்திக்கோர் திருத்தலமாய் திகழ்வதே திருமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில். இவ்வரிசையில் முருகனுக்கோர் திருத்தலமாக இவ்வாலயங்களைச் சூழ்ந்தாற்போல் அமைந்து பழம்பெரும் கோயிலாக விளங்குவது வில்லான்றிக் கந்தசுவாமி கோயிலாகும். சோழச் சிற்ப முறையில் இவ்வாலயத் திருவுருவங்கள் அமைந்திருப்பது அதன் பழமையினைப் பிரதிபலிப்பதும், பஞ்சலோகத்திலான ஆலய மூலவிக்கிரமே உற்சவ காலங்களில் வீதி உலா வந்து அருள்பாலிப்பதும் இத்தலத்திற்கே உரித்தான தனித்தன்மை மிக்க அம்சமாகும்.

இவற்றுக்கு மேலாக சைவ உலகின் எப்பாகத்திலும் காணப்படாத நடைமுறையொன்று இங்கு பின்பற்றப்படுகின்றது. அதாவது சைவக் கோவில்களில் மூலமூர்த்தியாக விளங்குவது சிலா விக்கிரகமே. (கற்களாலான சிற்பம்) ஆனால் இக்கோவிலில் மாத்திரமே பஞ்சலோகத்தில் உருவான வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப் பெருமானே மூல மூர்த்தியாக வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார்.

இன்றைக்கு பல நூற்றாண்டுகள் இத்தலம் பழமை வாய்ந்ததைப் போல் அதே ஆகம சாஸ்திர விதிப்படியே தினமும் பூசைகள், திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. இத்தலத்தின் வரலாறானது, தமிழ்நாடு திருவேரகத்தில் வாழ்ந்து வந்த சிவசுப்பிரமணியசர்மா என்பவர் தான் வணங்குவதற்கென குமாரநாத சிற்பியை கொண்டு வந்து பஞ்சலோகத்தினால் சண்முகநாதம் பெருமானை உருவாக்கினார். இதனால் கருணையுற்ற பெருமான் சிவசுப்பிரமணிய சர்மாவுக்கு சாயுச்சிய பதவியை அருளவே கலக்கமுற்று சுற்றத்தோர் இத்திருவுருவத்தை சிதைத்து விட எண்ணினர்.

இதன் விளைவால் சண்முகப் பெருமான் தமக்கென ஓர் தலத்தை தேடிப் புறப்பட்டவர் போல் சிற்பியின் கனவிற் தோன்றி என்னை இலங்கைக்கு செல்லும் கப்பலில் ஓர் பேழைக்குள் வைத்து அனுப்பி விடு என்று சொல்லவே சிற்பியும் அவ்வாறே செய்தார். இதன் பின் இச் சண்முகப் பெருமானின் திருவுருவம் திருகோணமலை முடமாண்டான் என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டதிற்கு இரண்டு வித வரலாறுகள் உள்ளன. ஒன்று இலங்கையின் கிழக்குத் திசைநோக்கி வந்து கொண்டிருந்த கப்பல் காற்று இல்லாமையினால் நின்றதாகவும், பின் மாலுமியின் கனவில் தோன்றிய சண்முகப் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் வந்த பேழையைக் கடலில் வீசிவிடக் கூறியதாகவும், அம்மாலுமி அப்படியே செய்ய கப்பலும் நகர்ந்ததாகவும் சில காலங்களின் பின் கரையூரவர்களின் வலையில் பேழை ஒன்று வந்ததாகவும் காலங் காலமாய் ஓர் பூர்வீக வரலாறு உண்டு. இன்னுமொரு வரலாறானது பழைய ஓர் ஆவணத்தின்படி ஒல்லாந்தர் காலத்தில் (1762) இத் திருவுருவங்கள் வந்த பேழையைத் திருக்கோணமலைக்கு அருகாமையில் வந்த பாய்க்கப்பல் ஒன்று காற்றில்லாமல் நின்றதாகவும் அப்போது சுவான் சம்மட்டியர் சவரியப்பரும் அவரது மகனும் படகொன்றில் போய் அரிசி ஏற்றுமதி பண்ணி வந்தபோது அக்கப்பலுக்கு சமீபமாக வந்ததாகவும், அப்பொழுது அந்த கப்பற்காரர்கள் அவர்களை சைகைகாட்டி அழைத்து இவ்வூரின் பெயரை வினவியதாகவும், இவ்வூரின் பெயர் திருக்கோணமலை என்று கூறியவுடன் வடதேசத்தவர்களில் ஒருவர் இப்பெட்டியை திருக்கோணமலையில் இருக்கும் யாரிடமாவது கொடுக்கும்படி சொன்னதாக் கூறி இப்பெட்டியை இவர்களிடம் கொடுத்ததாகவும் குறிக்கப்பட்டுள்ளது. பின் அவர்கள் கரைக்குச் சென்று அப்பெட்டியை உடைத்துப் பார்க்கும்போது பஞ்சலோகத்தினாலான ஆறுமுகமுடைய கந்தசுவாமியாரும் இரண்டு அம்மன்களும், வேலாயுதம் ஒன்றும், ஓர் பார்கவதப் பொல்லும், சிவ பூசைச் சாமான்களும் பணமாய் எழுபத்தைந்து இறைசாலும் (எரு) அப்பெட்டியில் காணப்பட்டதாக கூறப்படுகின்றது.

அதன் பின் அவ்வூர்க் குருகுலப் பகுதியினரின் அக்காலத்தில் இருந்த சீவலை முதலித்தம்பி எனும் வெள்ளாளப்பிரபுக்கும் ஊர்மணியமாய் இருந்த ஸ்ரீ.வே.ம.கதிர்காமர் மணியம் அவர்களுக்கும் அறிவித்து அவர் ஊரவர்கள் எல்லோரையும் அழைத்து ஓர் கூட்டம் வைத்து முடமாண்டான் என்னும் இடத்தில் மகாராஜா மலைக்குச் சமீபமாக சித்திரை மாதம் (சுபானு வருடம்) **1763**ம் ஆண்டு அத்திவாரம் இட்டு ஸ்தூபி, மண்டபம், தீர்த்தக் கிணறு ஆகியவற்றைக் கட்டி ஆவணி மாதம் (சர்வசித்து வருடம் கலியுகம் **(4867) 1765** பார்த்தீப வருடத்தில்) கும்பாபிஷேகம் இந்தியாவில் இருந்து வந்த ஸ்ரீபரசுராம ஐயரால் நிறைவேற்றப்பட்டது.

நித்திய பூசைகள் கிரமமாய் நடைபெற்று வந்தன. ஆவணி மாதத்தில் திருவிழா கொண்டாடப்பட்டது. சுவாமி தீர்த்தம் ஆட அருகே இருந்த ஒரு சிறிய குளம் தூர்வாரி தீர்த்தக்குளமாக்கப்பட்டது. பின் வே.ம.கதிர்காமமணியம் மூப்படைந்ததால் கோயில் கருமங்களை கொண்டு நடாத்துவதற்கு சுவான் சம்மட்டியாரின் மகன் சவரியப்பர் நியமிக்கப்பட்டார். ஸ்ரீ.வே.ம.கதிர்காமமணியம் இறைவனடி சேர அவரது மகன் க.ம.வேலப்பர் ஊர்மணியமாக பட்டங் கட்டப்பட்டார். பின் **1782**ம் ஆண்டில் ஆங்கிலேயர்களின் யுத்தக் கப்பல்கள் இவ்வூரைத் தாக்கியதால் மக்கள் சிறிது காலம் சிதறி ஓடி அண்டியுள்ள கிராமங்களில் வசித்தார்கள். அமைதி திரும்பியவுடன் தங்கள் இடத்துக்கு வந்து வழமைபோல் காரியங்கள் நடைபெற்றது. ஸ்ரீ சவாரியப்பன் மூப்படைந்த காரணத்தால் தனது சகோதரனின் மகன் ஸ்ரீ பெரிய ஆனந்தரை இக்கோயிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகம் செய்ய எல்லோருடைய சம்மதத்துடன் நியமித்தார். திரும்பவும் **1782**ல் ஆங்கிலேயர் இவ்வூரைத் தாக்க இக்கோயிலும் அழிந்துவிட ஸ்ரீபெரிய ஆனந்தரும் காயமுற்றுப் பின் சிவபதமடைந்தார். ஸ்ரீபெரிய ஆனந்தரின் மகன் ஆனந்தர் வினாசித்தம்பியும், ஊர்மணியம் க.ம.வேலப்பரும் (கதிர்காம மணியத்தின் மகன்) பலரும் இத் திருவுருவத்தை ஓர் பெட்டியில் வைத்து பூட்டித் தம்பலகாமம் திருக்கோணேசர் ஆலயத்தில் பாதுகாப்பாக வைத்தார்கள். சில காலத்திற்கு பின் இம் மூர்த்தியைத் தம்பலகாமம் கோணேசர் ஆலயத்தில் பிரதிஸ்டை செய்ய எத்தனித்தும் மூன்று முறையும் தடைப்பட்டது. சில காலம் சென்ற பின் மேற்குறிப்பிட்ட ஸ்ரீ.க.ம.வேலப்பருடைய சொப்பனத்தில் முருகன் தோன்றி தன்னை வில்லூன்றி என்னுமிடத்தில் பிரதிஸ்டை செய்யுமாறு கூறியதாகவும், அவ்வாறே ஸ்ரீ.க.ம.வேலப்பரும் சிவலை முதலித்தம்பியும் சில கரையூரவர்களும் மேற்படி விக்கிரகத்தை வில்லூன்றி என்னுமிடத்தில் உள்ள விக்னேஸ்வரர் ஆலயத்தில் வைப்பதாகத் தீர்மானித்து வில்லூன்றியிலேயே வைரவநாத குருக்கள் சுப்பையர் பொருட்டு பாலப்பசெட்டியார் கட்டுவித்த விக்கனேஸ்வர ஆலயத்தில் வைத்தார்கள்.

அந்த ஆலயத்தை பின்னும் சில காலம் சென்றபின்னர் விஸ்தீரணமாகக்கட்டி இந்த மூர்த்தியை தானே பிரதான மூர்த்தியாக அதிலமைக்கக் கருதி அதற்கு வேண்டிய நிலத்தை **1809**ம் ஆண்டு தை மாதம் **5**ம் திகதி இராமநாதஐயர், சிந்தாமணி ஐயர், வைரநாத குருக்கள், முத்தையா சுப்பையா, நாராயண விஸ்வநாத பட்டர் என்னும் நான்கு பிராமணர்களும் தர்ம சாசனம் செய்து கொடுத்தார்கள். இத்தரும சாசனத்தின்படி இப் பிராமணர்கள் நான்கு பேருடைய ஆண் வம்சத்திற்கு இக்கோயில் பூசை உரித்து உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சாலிவாகனசகம் **(1734)** கலியுகம் **(4911)** பிரசோற்பத்தி வருடம் ( ) தை மாதம் **5**ம் திகதி முகூர்த்தத்தில் அஸ்திவாரமிடப்பட்டு மூலஸ்தானம், கர்ப்பக்கிரகம் முதலான,3 மண்டபங்களும், **2** மண்டபங்கள் ஓட்டால் வேய்ந்தும், ஒன்று ஓலையால் வேய்ந்தும், களஞ்சிய வீடும், கிணறு, யாகசாலை, வைரவசூலந்தாபிக்க மால், சுற்றுமதிற்சுவர் யாவுங் கட்டிமுடித்து வெளிவீதியில் ஒரு கேணியும் வெட்டுவித்து க.ம.வேலப்பர் மணியமும் திருகோணமலை **2**ம் நம்பரில் இருக்கும் கரையூரவர்களுமாய் முடிப்பித்தார்கள்.

கும்பாபிஷேகத்திற்காக முகூர்த்தம் நியமித்து கலியுக **4914**ல் ஸ்ரீமுக வருசத்தில் ஆவணி மாதம் கி.பி.**1813** கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. அக்காலம் முதலாக நித்திய பூசை உற்சவம் முதலான வழிபாடுகள் யாவும் கிரமமாய் நடந்து வந்தன. பின் **1815**ம் ஆண்டைக் கொண்ட பின்னொரு உறுதியின் பிரகாரம் வேலன் கந்தன் என்பவர் மடப்பள்ளி, தீர்த்தக் கிணறுக்கு வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலங்களை கோயிலில் பராமரிப்புக்காரர்களிடம் கொடுத்ததாகத் தெரியவருகின்றது. ஸ்தம்ப மண்டபம் வயிரவநாத வன்னித்தம்பியும், விழா மண்டபம் சின்னக்குட்டிப்பிள்ளையும், மகாமண்டபம் முத்தையராலும், பிறர் பொருளாலும் கட்டுவித்து பின் சுவாமிநாத வன்னிபமும், மறுபேரும் பழுது பார்த்து மதில் முழுவதும் கதிரவேலு முதலியாருடைய பொறுப்பில் கட்டுவித்து வாகனசாலை சிற்றம்பலம் சுப்பிரமணியரும், வயிரவநாத சின்னக்குட்டியரும், மறுபேரும் கட்டுவித்தது. பிள்ளையார் கோவில் கு.மூத்ததம்பியார் கட்டுவித்தது. தண்டாயுதபாணி கோவில் ஐயம்பிள்ளையாலும் பிறருடைய செலவிலும் கட்டப்பட்டது. நாகதம்பிரான் கோவிலும் மணிக்கோபுரமும் வைரவநாதர் சின்னக்குட்டியாரின் முயற்சியில் கட்டுவித்தது. கோபுரவாசல் தருமரும் சண்முகப்பிள்ளையும் கட்டுவித்தது வைரவர் கோவில் பராமரிப்புக்காரன் மாரிமுத்துவினால் கட்டுவித்தது. பின் கு.மூத்ததம்பியினால் பழுதுபார்க்கப்பட்டது.

வடக்கு மதில் பழுதடைந்த பின் சின்னக்குட்டியாப்பிள்ளையினால் கட்டுவித்தது. மடம் சின்னக்குட்டியாரும், சுப்பிரமணியரும் ஊர் பொருளில் கட்டுவித்தது. தீர்த்த மண்டபம் முத்தையராலும் பிறர் பொருளிலும் கட்டுவித்துப் பின் சுவாமிநாத வன்னிபமும் மறுபேரும் பழுது பார்க்கப்பட்டது. வசந்த மண்டபம் கு.மூத்தம்பியார் கட்டுவித்தது. இந்தக் கோவிலிலே அதிகப் பற்றான திருப்பணிகள் பெரிய கடைத்தெரு, கரையூர், வில்லூன்றி, முதலியார் தெரு ஆகிய பற்பல இடங்களிலிருந்த புண்ணியவான்களினால் காலத்துக்கு காலம் செய்து வரப்பட்டது. பின் **30.07.1925**ம் ஆண்டு ஓர் கட்டுத்தேர் செய்வித்து வெள்ளோட்டம் விடப்பட்டது. **1939**ம் ஆண்டு கதிரவேலுப்பிள்ளை (ஆசிரியர்) என்பவரால் ஓர் தேர் முட்டி கட்டுவிக்கப்பட்டது. பின் **1945**ம் ஆண்டு கோணாமலை குமாரகுலசிங்கம் என்பவரால் நவக்கிரக கோயில் கட்டுவிக்கப்பட்டது. பின் இக்கோயிலில் இருந்த கட்டுத்தேர் சிதைந்த நிலையால் பொது மக்களின் பொருளுதவியில் ஓர் சித்திரத்தேர் திரு.இரா.சம்பந்தன் (பா.உ) தலைமையில் ஓர் திருப்பணிச்சபை உருவாகி **1982**ம் ஆண்டு புரட்டாதி **15**ம் திகதி செய்வித்து வெள்ளோட்டம் விடப்பட்டது. பின் அதற்கு ஓர் உறுதியான தேர் கொட்டகை **1983**ம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. பராமரிப்பு உரிமவத்தை பெற்றிருக்கும் இரு சந்ததியர்களது முன்னோர்களால் செய்விக்கப்பட்டமை பல.

இவர்களுள் வேளாள பகுதியைச் சேர்ந்த கதிரவேலு முதலியார் தாமும் சிற்சில திருப்பணிகளைச் செய்வித்தது மாத்திரம் அல்லாமல் கோவில் பாவனைக்காக பெருந் தொகையான பொருளமைந்த ஆபரணங்களையும், கோவிற் செலவுக்காக மூன்று துண்டு நிலங்களையும் கொடுத்தார். இந்த திருப்பணிகளால் போலும் இவரும் கோவிற் பராமரிப்பாளர்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ள நேரிட்டது. இவர் காலந்தொட்டு அதாவது **1817**ம் ஆண்டு முதல் இந்த கோவில் பாராமரிப்பு குறித்து இவரது பரம்பரையினர் உரித்துடையவர்கள் ஆனார்கள். **1809**ம் ஆண்டு கரையூரவர்களது பரம்பரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரிமுத்து பரம்பரையிலிருந்து வருகின்றது. **1809**ம் ஆண்டு தொட்டு நிலச் சாசனத்தின்படி அதில் ஒப்பமிட்ட நான்கு பிராமணர்களின் ஆண்வழிச் சந்ததியினர் இக்கோவில் பூசை அதன் வருமானங்கள் யாவற்றிற்கும் உரித்துடையவர்களாவர். **1809**ம் ஆண்டு கைச்சாத்திட்ட வைரவநாத குருக்கள் பின் அவர் மகன் வைத்திலிங்க குருக்கள், பின் அவர் மகன் இராமலிங்ககுருக்கள் பின் அவர்மகன் பூரானேந்தஸ்வரகுருக்கள் சிவசுப்பிரமணிய குருக்கள், தொடர்ந்து அவர் மகன் சுரேனேந்ஸ்வர சர்மாவும், அவர் மறைவிற்குப் பின் அவர்களின் மைந்தர்கள் சுதாகர குருக்கள் (தற்போதைய கோயில் பிரதம பூசகர்) அவர் சகோதரார் சிவாகர குருக்களும் கோயில் பூசைக் காரியங்களை செய்கின்றார்கள்.

இரு மணியக்காரர்களில் ஒருவரான குருகுல வம்சத்தினரின் பரம்பரையில் கதிர்காம மணியமும் **(1763 AD)** என்பவரும்,
பின் சுவான் சம்மட்டியர் சவாரியப்பர் **(1782 AD)** என்பவரும்
அதன் பின் பெரியஆண்டார். **(1795 AD)** என்பவரும்,
அதன் பின் க.ம.வேலப்பமணியமும், (**1809**ம் ஆண்டு கையொப்பமிட்ட ஒருவர்)
அதன் பின் ஆனந்தர் வினாசித்தம்பி (சவரியப்பரின் பேரன்)
அதன் பின் ஸ்ரீகணபதிப்பிள்ளை (வேலப்பமணியத்தின் மகன்)
அதன் பின் கந்தப்பர் மாரிமுத்து (கணபதிப்பிள்ளையின சகோதரர்)
அதன் பின் மா.ம.கணபதிப்பிள்ளை (மாரிமுத்துவின் மகன்)
அதன் பின் முத்து அனந்தரும் (கணபதிப்பிள்ளையின் மருமகன்)
அதன் பின் ஆ.குமாரசுந்தரம் குஞ்சித்தம்பி வைத்தியர் (ஆனந்தரின் மகன்)
அதன் பின் அவர் மகன் சண்முகம் சுப்பிரமணியம், (குமாரசுந்தரத்தின் தாயின் சகோதரியின் மகன், அவர் மகன் ச.ஞானகணேசனும்
அதன் பின் தற்போது அவர் மகன் ஞா.கதிர்காமதாசனும் மணியக்காரர்களில் ஒருவராக கடமையாற்றுகின்றார்கள்.

மற்ற மணியக்காரராகிய முதலியார் வம்சத்தில், முதலில் கதிர்வேல் முதலியார் (**1809**ம் ஆண்டு சாசனத்தில் ஒப்பமுற்ற ஒருவர்,
அதன் பின் சுவாமிநாத முதலியாரும்
அதன் பின் பொன்னையா முதலியாரும்
அதன் பின், டி.நல்லதம்பி என்பவரும்,
அதன் பின் ம.ம.சுப்பிரமணியம் என்பவரும்,
அதன் பின் அவர் மகன் சு.அழகராஜா என்பவரும்
அதன் பின் அவரது மருமகன் ரா.மயில்வாகனம் என்பவரும்,
பின் அ.சுப்பிரமணியம் (அழகராஜாவின் மகன்) என்பவரும்,
அதன் பின் அவர் இனத்தவராகிய ஆனந்தம் ஆசைப்பிள்ளை ஜெயரட்ணம் என்பவர் **1991**ம் ஆண்டிலிருந்து நிர்வாக மணியக்காரராய் கடமையாற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது சுதாகர குருக்கள் பிரதம பூசகராகவும் அவரது சகோதரர் சிவகர குருக்கள் உடன் சேர்ந்து பூசைக் கருமங்களை நடத்துகிறார்கள். இரு மணியக்காரர்களாக திரு.ஞா.கதிர்காமதாசன், திரு.ஆ.ஆ.ஜெயரட்ணம் ஆகியோர் தற்போது கடமை ஆற்றுகின்றார்கள். 1991ம் ஆண்டிற்கு பின் கோவிலில் பற்பல முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. வசந்த மண்டப வாயில் சிறு கோபுரம் கீர்த்திதாஸ் என்பவரால் கட்டுவிக்கப்பட்டது. மகா மண்டப அலங்கார வேலைகள் பொதுமக்கள் பணத்தில் செய்யப்பட்டது. நாராயணர் கோயில் கீர்த்திதாஸ் முன்னின்று கட்டுவித்தது.

பின் முருக பக்தர்களின் நீண்ட நாளைய ஆசையாகிய பெருமானுக்கு ஓர் ராஜகோபுரம் அமைக்கும் முகமாக 2004ம் ஆண்டு ஓர் திருப்பணிச்சபை திரு.இரா சம்பந்தன் தலைமையில் அமைக்கப்பட்டது. அதன் பின் 2004ம் மார்கழியில் வந்த கடல் சூறாவளியினாலும் நாட்டின் போர்ச் சூழலாலும் இக் கைங்கரியம் நெடுநாளாக தடைப்பட்டது. பின் பெருமானின் திருவருளால் இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட கலியபெருமாள் விஜயன் என்ற சிற்பாசாரியினால் 2008ம் ஆண்டு ஆடி மாதம் 14ம் திகதி பெருமானுடைய இராஜ கோபுரத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

ராஜகோபுர வேலைகளுடன் தொடர்பாகப் பல திருப்பணி வேலைகளும் நடைபெற்றன. மடப்பள்ளி, யாகசாலை, வசந்தமண்டபம், தேர்முட்டி யாவன சிற்ப கலை அம்சங்களுடன் புதுப்பிக்கப்பட்டன. மணிகோபுரம் புதிதாக அமைக்கப்பட்டது. இவை யாவும் பல கொடை வள்ளல்களாலும், பொதுமக்களின் அன்பளிப்பாலும் செய்விக்கப்பட்டது. 2011ம் ஆண்டு நவம்பர் 13ம் திகதி இராஜ கோபுரத்திற்கு எம்பெருமானுக்கு பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நிறைவேறியுள்ளது.

**கார்த்திகை 2011**

**ஆ.ஆ.ஜெயரட்ணம்,**
**நிர்வாக மணியக்காரர்,**
**வில்லூன்றிக் கந்தசாமிகோயில்,**
**திருக்கோணமலை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுரமேற் குமரன்

அஞ்சுதள கோபுரமீது ஆறுமுகன் தோன்றுகிறான்
ஆடுமயில் மீதமர்ந்த எழிற்கோலங் காணவாரீர்
தஞ்சமென வந்தணைந்து தாள்கள்தொழு மடியவரைத்
தாங்கிடவே தங்கவேலன் தானெழுந்தான் கோபுரமீது

மஞ்சுதவழ் கோபுரமேல் மால்மருகன் காட்சிதந்தான்
மங்கையர் இருவருடன் மாமயில் ஏறிவந்தே
கஞ்சமலர்ப் பதங்களிலே கொஞ்சுதண்டை சிலம்பொலிக்க
கந்தவேளுங் கோபுரத்தில் களித்துநட மாடுகிறான்.

கங்கைமகள் சரவணத்திற் சேர்த்தஆறு பொறிகளுமே
கவினுறு மதலைகளாக கார்த்திகைமாதர் மடிவளர
சங்கரியும் வந்து கண்டு சந்தோசமாய் அரவணைக்க
சரவணனும் கந்தனாகி வந்து நின்றான் கோபுரத்தில்

சிந்தாகுலந் தீர்க்கும் சிங்கார வேலனவன்
எந்தைஉமை பாலகனாய் ஈராறு விழிகளுடன்
முந்தைவினை போக்கிடவே முகம்பொழி கருணைகாட்டி
வந்தாடும் மயிலேறி வண்ணமுற நிற்கின்றானே

பச்சைமயில் ஏறியன்று பார்முழுதும் சுற்றிவந்து
பழம்வேண்டி பழனியான பாலகனும் பரிவோடு
இச்சாகிரியா சக்தியரோடு ஏறுமயில் வாகனனாய்
இன்னருள் சுரந்திடவே ஈங்கெழுந்தான் கோபுரமேல்


ஆலமுண்ட நீலகண்டன் அருமைத் திருமகனாம்
ஞாலமெல்லாம் புகழ்ந்திடும் ஞானபண்டித சுவாமி
சாலவேயிரு தேவியரோடு சதிராடும் மயிலேறி
காலமெல்லாம் நிற்பானே கோபுரமேற் குமரன்

சுபம்

**ஆக்கம்**

**கலாபூசணம் சங்கீதகலாவித்தகர்**

**செல்வி. மணிமேகலாதேவி கார்த்திகேசு.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜகோபுர சங்குஸ்தாபனப் பூசை



இராஜகோபுர சங்குஸ்தாபன பூசைகள் வேதாகமமாமணி, பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திர குருக்கள் தலைமையில் இடம் பெறுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராஜகோபுர சங்குஸ்தாபனப் பூசைகள் நடைபெறுகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராஜகோபுரத்துத் திருப்பணிச் சபைத் தலைவர்
திரு. இரா. சம்பந்தன் (பா.உ) அடிக்கல் நாட்டுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வியாகரண சிரோமணி சிவஸ்ரீ.பூரண.தியாகராஜக் குருக்கள்
தலைமையில் கிரியைகள் ஆரம்பம்



பிரதம குரு சிவஸ்ரீ.பூரண.தியாகராஜக் குருக்கள் ஆலய
மணியகாரர்கள் திரு. ஆ. ஆ. ஜெயரெட்ணம்,
திரு. ஞா. கதிர்காமதாசன் ஆகியோருக்குத் தர்ப்பை
அணிவித்துப் பூஜைகளைத் தொடங்குகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிய நவக்கிரக விக்கிரகங்களுக்கு
நீர் வார்த்தல்



அனந்த சயனப் பெருமாள் ஆலயத் தூபியின்
கலசாபிஷேகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆதி மூலத் தூபிக் கலச அபிஷேகம்



பரிவார மூர்த்திகளுக்கான தூபிக் கலசாபிஷேகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராஜகோபுரக் கலசங்கள் புறப்படுவதற்கான
பூஜைகள் ஆரம்பம்



கறுத்தப் பிள்ளையார் தூபிக்கு ஸ்தபதியால்
கலசம் வைக்கப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்தபதி திரு. கலியப்பெருமாள் விஜயன் இராஜ கோபுரத்துக்கான கலசங்களை வைக்கின்றார்



வசந்த மண்டபக் கோபுரத்தின் அழகுத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராஜகோபுரத்தை அமைத்த ஸ்தபதி திரு. கலியப்பெருமாள் விஜயன், திருப்பணிச் சபையினரால் பொன்னாடை போர்த்தப்பட்டு, தங்கப்பதக்கம் அணிவிக்கப்பட்டு, பாராட்டு மடல் வழங்கப்பட்டுப் பெருமையுடன் கௌரவிக்கப்பட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகப்பெருமானின் திருநாமங்களும் பொருளும்

முருகப்பெருமானின் பெயர்கள் சிலவும், அவற்றின் பொருளும், உச்சரிக்கும்போது அதன்பொருள் தெரிந்து உச்சரிப்பதே மேலான பலனைக் கொடுக்கும்

- சரவணன் - சரவணப் பொய்கையில் வளர்ந்தவன்
- காங்கேயன் - கங்கை நதியில் சரவணப்பொய்கையில் எடுத்துச்செல்லப்பட்டவன்.
- குமாரசுவாமி - சிவனின் மைந்தன்
- கார்த்திகேயன் - கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன்.
- குகன் - பக்தர்களின் இருதயமான குகையில் வசிப்பவன்.
- ஸ்கந்தன் - சிவஜோதியிலிருந்து பொறிகளாகப் புறப்பட்டவன்.
- ஷண்முகன் - ஆறுமுகத்தை உடையவன்.
- சுவாமிநாதன் - தந்தை சுவாமிக்கு உபதேசம் செய்தவன்.
- சிவகுரு - சிவனுக்கு குருவாக இருந்து உபதேசம் செய்தவன்.
- கடம்பன் - கடம்பமாலையை விரும்பி அணிபவன்.
- தணிகாசலம் - தணிகைமலையில் கோபம் தணிந்து இருப்பவர்.
- பழனி - முருகனே பழமாக இருப்பவர்.
- வரதன் - பக்தர்கள் கேட்கும் வரங்களை அளிப்பவர்.
- வேலன் - சக்திவேலை ஆயுதமாக வைத்திருப்பவர்.
- குமரன் - என்றும் வாலிபன் இளைஞன்
- மருகோன் - விஸ்ணுவின் மருகன்
- அக்கினிப்பூ - ஆறு பொறிகளில் இருந்து உண்டானவன்
- கந்தன் - தோள்வலி மிக்கவன்
- முருகன் - அழகன் இளமையானவன்
- சுப்பிரமணியன் - பிரமத்தில் உதித்தவன்
- சித்தன் - சித்தியை வழங்குபவன்
- குருபரன் - ஆசாரியனுக்கு ஆசாரியன்
- குருநாதன் - குருவாக விளங்குபவன்
- செவ்வேள் - செந்நிறம் உடையவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தேவசேனாதிபதி - தேவர்களின் தலைவன்
- தண்டாயுதபாணி - தண்டத்தை ஆயுதமாகஉடையவன்
- வேலாயுதன் - வேற்படையை அயுதமாக உடையவன்
- முத்தையன் - நீரில் தோன்றும் முத்தைப்போல் இயற்கை ஒளியுடையான்
- சேந்தன் - பூரணமானவன்
- விசாகன் - விசாக நட்சத்திரத்தில் பிறந்தவன்
- சுவாமி - அகில உலகங்களையும் அத்தனை உள்ள உயிர்களையும் சொந்தமாக உடையவன்
- பாவகி - அக்கினியை உடம்பாக உடையவன்
- வாகுலேயன் - கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன்
- சோமஸ்கந்தன் - சிவன் உமையின் நடுவில் இருப்பவன்
- சசிவாகனன் - மயில் வாகனன்
- அக்னிஜாதர் - அக்கினியில் பிறந்த திருவுருவம்
- உமாசுதன் - உமையம்மையின் குமரன்
- வரோதயன் - வரத்தால் தோன்றியவன்
- குன்றெறிந்தோன் - கிரௌஞ்சமலையை இருகூறாகப் பிளந்தவன்
- ஆண்டகை - பேராண்மையுள்ளவன்
- சுரபூபதி - விண்ணிற்கும் மண்ணிற்கும் தலைவன்
- உல்லாசன் - எப்போதும் ஒரே தன்மையாய் இருப்பவன்.
- நிராகுலன் - துன்பம் இல்லாதவன்
- கிரிராஜன் - மலை அரசன்
- சேவற்கொடியோன் - சேவலைக் கொடியாக உடையவன்
- மயிலேறும் பெருமாள் - மயிலை வாகனமாகக் கொண்டவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம்

நைமித்திய விழாக்களில் மிக மேன்மையானது மகா கும்பாபிஷேகம் இதனைப் பெருஞ்சாந்தி என்று கூறுவர் . மகா கும்பாவிஷேகத்தை நடத்துவதனால் மக்களுக்கும் நாட்டுக்கும் ஆலயத்துக்கும் சீரும் திருவும் பொலியும் . ஆலயத்தில் உள்ள மூர்த்திகளின் அருட்பிரகாசம் அதிகரிப்பதற்குப் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறையாவது அஷ்டபந்தனம் புதுப்பிக்கப்பட்டுக் கும்பாவிஷேகம் நடாத்தப்படவேண்டும்.

ஆலயங்களில் நடைபெறும் நித்திய நைமித்திக அபிஷேகங்களில் பால் ; இளநீர் முதலிய அபிஷேகத் திரவியங்களால் அஷ்ட பந்தனம் தேய்ந்து சிதைவதுண்டு . இதனால் பீடத்துக்கும் விக்கிரகத்துக்குமிடையே இடைவெளி ஏற்பட்டு விக்கிரகத்துக்கு அசைவு ஏற்படுவதுண்டு. அதனடியில் வைக்கப்பட்டிருக்கும் யந்திரமும் பாதிக்க படுவதுண்டு . இவ்வூறுபாட்டினால் நாட்டுக்கும் பூஜை செய்வோருக்கும் வழிபாடுசெய்வோருக்கும் பல இன்னல்கள் ஏற்பட கூடும் . ஆலயங்களுக்குப் புனருத்தாரணத் திருப்பணிகள் செய்து அஷ்டபந்தனம் சாத்தி மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து கும்பாவிஷேகம் நடத்துவது சிறந்த சிவபுண்ணியச் செயலாகும் . ஆண்டுதோறும் கும்பாவிஷேகத் தினத்திற்குச் சங்காபிஷேகமும் மணவாளக் கோல உற்சவமும் நடாத்தி அருட்பிரவாகத்தைப் பெருகச் செய்ய வேண்டும் .

ஆலயத்தில் அருட் செறிவும்; மூர்த்திகளில் அருட்பொழிவும் குறைவுபடாதிருப்பதற்குச் சிவசாரியர்கள் கண்ணும் கருத்துமாகப் பயபக்தியோடு சிவப்பணி புரிய வேண்டும். கும்பாபிஷேகத்தை நடாத்திவைக்கும் சிவாச்சாரியர் தெய்வத்தோடு ஒப்பச் சிறந்த இடத்தை வகிப்பவர் . ஆச்சாரிய லெட்சணமும் ; சிவாகம சிரோமணியாயுமுள்ள சிவாச்சாரியாருடைய நித்திய நைமித்திக பூஜைகளினால் ஆலயம் சிறக்கும் . மூர்த்திகள் அருளைச் சுரக்கும்.

**மூர்த்திகள் : –**

சிவாலயங்களில் சிவலிங்கத்தையும் ஏனைய ஆலயங்களில் அந்தந்த ஆலயங்களுக்குரிய சிலா விக்கிரகங்களையும் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்வது பொதுவிதி . இவைகட்கு விதி விலக்குகளுமுண்டு. உதாரணமாக திருக்கோணமலை வில்லுன்றிக் கந்தசுவாமி கோவிலின் கருவறையில் வள்ளி தெய்வானை சமேதரராக சண்முகப் பெருமானின் தாமிர விக்கிரகமும் ; அருள்மிகு முத்துகுமார சாமி கோவிலின் கருவறையில் லிங்கமும் வேலும் பிரதிஷ்டை செய்யபட்டிருக்கின்றன. வரலாற்றுப் பின்னணியை மனதில் வைத்து இத்தகைய பிரதிஷ்டைகள் செய்யபட்டுள்ளன .

இது வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் வரலாற்று மலரில் பிறிதோரிடத்தில் விரிவாகக் கூறப்பட்டள்ளது . தமிழ் நாட்டில் சிறந்த முருக ஸ்தலமாக விளங்கும் திருவேரகத்தில் கருவில் உருவாகிய சண்முகப் பெருமான் வள்ளி தெய்வானை சமோதராக மயில் வாகனத்தடன் வந்து அமர்ந்த இடம் வில்லூன்றியம் பதி . இங்குள்ள கந்தன் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறை முதலாக ஆறு மண்டபங்களைக் கொண்ட அழகிய அமைப்பை உடையது. ஓராறுமுகமும் ஈராறு கரமும் பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயுங் கொண்டு அழகிய மயில் வாகனத்தில் அமர்ந்த பாவனையில் வள்ளி தெய்வயானையுடன் கருவறையில் வீற்றிருக்கின்றார். மூலமூர்த்தியே (தாமிரவிக்கிரகம்) உற்சவ மூர்த்தியாக எழுந்தருளிவரும் அற்புத நிகழ்வு இங்கு நடைப்பெற்று வருகின்றது . மகோற்சவ நிறைவின் போது கந்தப் பெருமான் கரையடைந்து வெளிப்பட்டு எந்த இடத்தில் முதன் முதல் திருவடிகளைப் பதித்தாரோ அந்த இடத்துக்கே தீர்த்தமாட எழுந்தருளுவார்.

இரண்டு வீதிகளையுடைய இவ்வாலயத்தின் கோபுர வாயிலைக் கடந்து அமைதியாக உட்பிரவேசிக்கும் அடியார்களுக்கு முதலில் தரிசனம் தருபவர் ஸ்தம்ப பிள்ளையார். அழகிய ஸ்தம்பத்தை அடுத்துப் பலிபீடமும் மயூரமும் பிரதிஷ்டை செய்யபட்டிருக்கின்றன ஷ்தம்பத்துக்கு முன்பாக வீழ்ந்து நமஸ்காரம் செய்யும் போது நமது கீழான எண்ணங்களாகிய காமக்குரோதாதிகளைப் பலிபீடத்தில் பலி கொடுத்து மேலான தூய எண்ணங்களோடு எழுந்து மூலமூர்த்தியை வழிபடவேண்டும்.வெறுமனே வீழ்ந்து வணங்குவதால் பயன் ஏதும் ஏற்படபோவதில்லை.

ஆலயத்தின் உட்பிரகாரத்தில் வலம் வரும் அடியார்கள் மகா மண்டபத்தின் தெற்கு வாசலினூடாகப் பிள்ளையார், சக்திகள் சமேதரராக ஆறுமுக சுவாமி, முத்துகுமார சுவாமி, தண்டாயுதபாணி; ராஜராஜேஷ்வரி முதலிய பஞ்சலோகத் திருவுருவங்களைத் தரிசிக்கலாம். பல வருடங்களுக்கு முன்னர் கொட்டியாபுரப் பற்றில் இருந்து பிரசித்தி பெற்ற சிவாலயமாகிய அகஸ்தியர் ஸ்தாபனத்தில் ஸ்தாபிக்கபட்டிருந்த பிள்ளையாரை பிரம்ம ஸ்ரீ வைரவ நாதக் குருக்களானவர் கங்குவேலி என்ற இடத்தில் வைத்து வழிபட்டு வந்தார் . அந்த பிள்ளையாரே இப்போது வில்லுன்றிக்கந்தன் ஆலயத்து உட்பிரகாரத்தில் நிருதி மூலையில் நினைத்த காரியம் அனுகூலமாய் நிறைவேற அருள் புரியும் பெருமானாக வீற்றிருக்கின்றார் . இந்தப் பிள்ளையாரை அடியார்கள் கறுத்தப் பிள்ளையார் என்ற சிறப்பு பெயரிட்டு வணங்கி வருகின்றாகள். பரிவார மூர்த்தியாகிய அந்தப் பிள்ளையாருக்கு அழகாய் அமைக்கப்பட்ட தனிக் கோயிலுண்டு .

உள்வீதி வலம் வரும் அடியார்கள், பரிவார மூர்த்திகளாகத் தனிக் கோவில்களில் பிரதிஸ்டை செய்யட்டிருக்கும் தண்டபாணி தெய்வத்தையும், நாகேஸ்வரர் , நவக்கிரகங்கள்; வைரவர் ; சூரியன் முதலிய சிலா விக்கிரக மூர்த்திகளையும் தரிசித்து வழிபடலாம் . ஸ்நபன மண்டபத்தில் புனருத்தாரணம் செய்து புதிதாக அமைக்கபட்ட கோயில்களில் விஸ்வநாதப் பொருமானும் விசாலாட்சி அம்பாளும் சிவமும் சக்தியுமாக அமர்ந்து அருள் பாலித்து கொண்டிருக்கிறார்கள் . ஆலயத்தில் எல்லா மூர்த்திக்கும் யந்திர ஸ்தாபனம் செய்து அஷ்டபந்தனம் சாத்தப்பட்டிருகின்றது .

**ஞானசிரோமணி பண்டிதர் இ.வடிவேல்(அமரர்)**
**(1994ம் ஆண்டுக் கும்பாபிஷேகமலரிலிருந்து)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இக்கோயில் வரலாற்றின் முக்கிய குறிப்புக்கள்.

1. **1762**ம் ஆண்டு முருகப் பெருமானின் திருவுருவம் கிடைக்கப்பெற்றது.

2. முடமாண்டான் (இப்போது மனனையாவெளி என்று குறிப்பிடுவார்கள்) என்னும் இடத்தில் பெருமானுக்கு ஓர் ஆலயம் அமைக்க **1763**ம் ஆண்டு அஸ்திவாரம் இடப்பட்டது.

3. இக் கோவிலில் எம் பெருமானின் திருவுருவம் பிரதிஸ்டை செய்யப்பட்டு **1765**ம் ஆண்டு ஆவணி மாதம் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

4. **1782**ம் ஆண்டு ஆங்கிலச் சேனைகள் திருமலையைத் தாக்கியதால் ஊர் மக்கள் கிராமங்களுக்குச் சென்றார்கள், எஞ்சி உள்ளவர்கள் கோயிலைப் பராமரித்தார்கள்.

5. திரும்பவும் **1795**ம் ஆண்டு ஆங்கிலேயர் சேனை குண்டு வீசியதால் முடமாண்டானில் கட்டுவித்த கோவில் சிதைவடைந்ததால் எம்பெருமானைத் தம்பலகாமம் கோணேஸ்வர ஆலயத்திற்குக் கொண்டு சென்றார்கள்.

6. அங்கு எம்பெருமானைப் பிரதிஸ்டை செய்ய மும்முறை எத்தனித்தும் அம்முயற்சி தடைப்பட்டது.

7. பின் **1809**ம் ஆண்டு வில்லூன்றி என்னும் இடத்தில் உள்ள விக்னேஸ்வர ஆலயத்திற்கு கொண்டு சென்று அக்கோயிலைப் பராமரிக்கும் நான்கு பிராமணர்களிடம் சாசனம் எழுதி அவர்கள் காணியில் ஓர் கோயிலைக் கட்டி எம்பெருமானைப் பிரதிஸ்டை செய்ய முடிவு செய்தார்கள்.

8. வில்லூன்றியில் கோயில் கட்டி எம்பெருமானை பிரதிஸ்டை செய்து முதலாவது கும்பாபிஷேகம் **1813**ம் ஆண்டு ஆவணி மாதம் நடைபெற்றது.

9. இரண்டாவது கும்பாபிஷேகம் **1830**ம் ஆண்டு ஸ்ரீ.காசிநாதக் குருக்களாலும், கார்த்திகேசு குருக்களாலும் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த ஒரு குருக்களாலும் நிறைவேற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மூன்றாவது கும்பாபிஷேகம் **12**ம் திகதி ஆவணி மாதம் **1891**ம் ஆண்டு நடைபெற்றது.

11. நான்காவது **24**ம் திகதி தை மாதம் **1922**ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்து **29**ம் திகதி ஆனி மாதம் **1922**ம் ஆண்டு இ.கு.பூர்ணானந்தேஸ்வர பிரதம குருவின் மேற்பார்வையில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

**12. 30.07.1925**ம் ஆண்டு ஓர் கட்டுத்தேர் செய்வித்து வெள்ளோட்டம் விடப்பட்டது.

13. எம்பெருமானுக்கு ஐந்தாவது கும்பாபிஷேகம் **20**ம் திகதி ஆனி மாதம் **1945**ம் ஆண்டு பிரம்மஸ்ரீ இ.கு.பூர்ணானந்தேஸ்வரக் குருக்களாலும் அவருடைய சிரேஸ்ட புத்திரன் பூ.கு.சிவசுப்பிரமணியக் குருக்களாலும் நடாத்தப்பட்டது.

14. பின்பு **4**ம் திகதி மாசி மாதம் **1967**ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டது **31**ம் திகதி ஐப்பசி மாதம் **1969**ம் ஆண்டு பிரம்மஸ்ரீ இ.கு.பூர்ணானந்தேஸ்வரக் குருக்களின் மகன் பூ.கு.சிவசுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**15. 1982**ம் ஆண்டு புரட்டாதி மாதம் **15**ம் திகதி ஓர் சித்திரத் தேர் செய்வித்து வெள்ளோட்டம் விடப்பட்டது.

16. கடைசியாக **31.01.1994**ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு **27**ம் திகதி ஆனி மாதம் **1994**ம் ஆண்டு சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களால் ஏழாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது.

17. எம்பெருமானின் அடியார்களின் நெடுநாளைய ஆசையாகிய இராஜகோபுரம் அமைப்பதைக் கருத்திற் கொண்டு **2004**ம் ஆண்டு மார்கழி மாதம் **13**ம் திகதி இராஜகோபுரம் செய்வதற்கு ஒரு திருப்பணிச்சபை திரு.இரா.சம்பந்தன் (பா.உ) அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டது.

18. பின் **2008**ம் ஆண்டு ஆடி மாதம் **14**ம் திகதி எம்பெருமானின் இராஜகோபுரத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. இவ் இராஜ கோபுரத்துடன் மடப்பள்ளி, யாகசாலை, தேர்முட்டி, வசந்த மண்டபம், என்பன சித்திர வேலைகளுடன் திருப்பணி செய்யப்பட்டது. மணிக்கோபுரம் ஒன்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது.

**20. 2011**ம் ஆண்டு கார்த்திகை மாதம் **13**ம் திகதியில் இராஜகோபுரத்திற்கு எம் பெருமானுக்கும் பரிவார மூர்த்தங்களுக்கும் கும்பாபிஷேகம் நடத்த திருவருள் கிட்டியுள்ளது.

பி.கு. எம் பெருமானின் மேற்குறிப்பிட்ட வரலாறு பல குறிப்புகளில் இருந்தும் 1896ம் ஆண்டு நடந்த ஓர் வழக்கின் ஆவணங்களில் இருந்து **1922**ம் ஆண்டு பிரம்மஸ்ரீ ப.கு.யோகீஸ்வர குருக்களால் பல பழைய சாசனங்களைப் பார்வையிட்டுத் தயாரித்த புத்தகத்தில் இருந்தும் எடுக்கப்பட்டவை .

ஆ.ஆ.ஜெயரட்ணம்
நிர்வாக மணியகாரர்
வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில்
திருக்கோணமலை

## இறைவனின் கருணை

எந்த வேளையும் இறைவனை நினைக்க வேண்டும். அது ஆரம்பத்தில் முடியாவிட்டாலும் மூன்று வேளை தவறாமல் நினைக்கவும். காலை எழுந்தவுடன் "இறைவனே இன்று நான் நல்ல வழியில் நிற்க அருள் புரி" என்று வணங்கவேண்டும். உணவு உட்கொள்ளும் பொழுது "இறைவனே இந்த உணவினால் எனக்கு நல்ல அறிவும், அன்பும் உண்டாக அருள் புரி" என்று வணங்க வேண்டும். இரவில் படுக்கும்போது "இறைவனே இந்த உறக்கத்தில் உன் எண்ணமே நிற்க அருள் புரி" என்று வணங்க வேண்டும்.

கிருபானந்த வாரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயிலை வலம்வருவதன் நோக்கம்

காலையிலும், மாலையிலும் பொதுவாக உடற்பயிற்சியின் பின் வேலைகளாக நாம் பழக்கப்படுத்தியுள்ளோம். இது இல்லாதவர்களுக்கு கோயில் தரிசனமும், கோயிலை வலம் வருவதும் நல்ல உடற்பயிற்சியாக அமையும். சிறியவர்களுக்கும், பெரியவர்களுக்கும் எளிதில் செய்யக்கூடிய ஓர் உடல் பயிற்சியே கோயிலை வலம் வருதல். காலணிகளைக்களைந்து வலம்வருதல், தோப்புக்கரணமிடுதல், கும்பிடுதல் முதலியவை உடலின் சக்தியை அதிகரிக்கின்றன. இவ்வாறு நாமறியாமலே உடலிலுள்ள எல்லா மூட்டுக்களும், தசைகளும் நன்றாக அசைவடையும் ஓர் உடற்பயிற்சியே கோயில் தரிசனத்தில் நாம் செய்வது.

வலம் வருதல் என்பது, வலப்பக்கம் சுற்றி வருதல் என்பதே. பொதுவாக கோயிலை வலம் வருவது வலது பக்கமாகத் தான். இப்படி செய்வதால் நாம் இறைவனுடன் கூடுதலாக நெருங்குகின்றோம் என்பது பெரியோர் கருத்து. கோயிலை வலம் வரும்போது முன் ஜென்மங்களில் செய்த பாவமும் அழிந்து விடும் என்பது இந்து மக்களின் அசையாத நம்பிக்கை.

ஓலைச்சுவடி
**இந்து மத ஆசார – நம்பிக்கை இரகசியங்கள்.**

## நமஸ்காரத்தின் தத்துவம்

கடவுள் எல்லோருடைய உள்ளத்திலும் குடியிருக்கின்றார். நம்முடைய இதயத்தில் பணிவை வரவழைத்துக்கொண்டு மற்றவரின் உள்ளத்தில் உறையும் இறைவனை நாம் உணர்ந்து வணங்குகின்றோம். இப்படி இறைவன் எல்லோருடனும் இருக்கின்றார் என்பதை உணர்ந்து ஒருவரை ஒருவர் மதிக்கக் கற்றுக்கொள்வதே நமஸ்காரம் எனப்படும். உலகப் பண்பாட்டுக்கு இந்து மதம் கற்றுக்கொடுத்த அபூர்வமான கலாசாரப் பண்பு இதுவேயாகும். நமஸ்காரம் செய்யும் போது நம்முடைய மனதில் இருக்கும் அகம்பாவம், பகைமை, சுயநலம், பொறாமை ஆகியவை நீங்கிவிடும். ஒருவர்க்கும் மற்றவர்க்கும் இடையே உள்ள உயர்வு தாழ்வு பற்றிய உணர்வு போய்விடும். எல்லோரும் இறைவனின் படைப்பு என்பதை உணர்ந்து மனதில் சமநிலையைப்பேணுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக மனிதன், "அவன் என்னை விட எந்த விதத்தில் உயர்ந்தவர்? நான் எந்த முறையில் தாழ்ந்து போய்விட்டேன்" என்று கருதுகின்றான். இப்படிப்பட்ட உணர்வு அகந்தையை வளர்க்கின்றது. இதை நாம் துறக்க வேண்டும். அதை அடைய உதவுவது பணிவான உணர்வு தான். அதற்கு நமஸ்காரம் செய்வது உதவுகிறது. வணங்கும் ஒருவருடைய இதயம் வணங்கப்படுபவனின் இதயத்தில் உள்ள இறைவனைத் தான் வணங்குகிறது. ஆகையால் இது மனிதனுக்கு செய்யப்படுவது அல்ல. இறைவனுக்கு செய்யும் மரியாதையே ஆகும்.

நமஸ்காரம் செய்யும்போது நம்முள்ளே நேய உணர்வு வளர்கிறது. பிறரை அன்புடனும், நட்புடனும் பார்க்க முற்படுகின்றோம். நமக்குள் பிறரும், இறைவனைப் பார்ப்பது சமத்துவ உணர்வைத் தூண்டி விடுகின்றது. நம்முடைய உடல் இறைவனை சுமந்து செல்லும் ரதம் எனக் கருதுகின்றோம். இது நல்ல எண்ணங்களுடனும், நல்ல உணர்வுகளுடனும் வைத்துக்கொள்ளும் பொறுப்பையும் பெறுகின்றோம்.

நன்றி கோபுரம் வைகாசி 2010

## பிரணவத் தியானம்

உலகில் ஒவ்வொரு சமயத்திலேயும் சில எழுத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார்கள். பெரும்பாலும் அந்தச் சமயவாதிகளுக்குக் கூட ஏன் இத்தகைய முக்கியத்துவம் என்பது தெரியாமல் இருக்கும். நன்கு அறிந்த பெரியோர்களைக் கேட்டால் அந்த எழுத்துக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரியும். அப்போது ஒரு பெரிய ஆன்மிக உண்மை தெரியவரும். பெரும்பாலும் மற்றச் சமயங்களில் சிறப்பாகக் கருதப்படும் அட்சரங்களின் தோற்றம் எப்படி என்று கவனித்தால் பெரும்பாலும் அவை எல்லாம் பாரத நாட்டில் "ஓம்" என்ற பிரணவத்தில் தெளிவாக இருக்கக் காணலாம். மந்திரங்கள் எதுவாயினும் அதன் முன்னால் ஓம் சொல்லப்பட வேண்டும். அஷ்டோத்திரம், சகஸ்ரநாமம் முதலிய அர்ச்சனை நாமாவளிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பும் "ஓம்" சொல்லப்பட வேண்டும். இன்று அட்சர விஞ்ஞானத்தின்படி ஒவ்வொரு எழுத்துக்கும் ஒருநிறம், வடிவம் சக்தி உண்டென்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

அட்சரங்களின் தனிச்சக்திகளைச் சேர்த்து ஒரு கூட்டுச் சக்தியை உண்டாக்குவது தான் மந்திரங்கள். "ஓம்" என்ற சொல்லில் மூன்று எழுத்துக்கள் அடங்கி இருக்கின்றன. அவை அ, உ, ம் என்பவை ஆகும். இந்த மூன்று எழுத்தின் கூட்டு உச்சரிப்புத்தான் "ஓம்".

"அகர முதல எழுத்தெல்லாம்", என்று வள்ளுவர் சொன்னது தமிழ் மொழிக்காக மட்டுமல்ல மற்ற எல்லா மொழிக்கும் பொருந்தும். ஆங்கில மொழியில் முதல் எழுத்து "ஏ" அகரத்தின் திரிபு. உருது (அராபி) மொழியில் முதல் எழுத்தும் "அலீப்". இப்படி எந்தமொழியின் முதல் எழுத்தைக் கவனித்தாலும் அது "அ"வின் திரிபாகவே இருக்கும். "அ" தான் எல்லா மொழிகளுக்கும் தோற்றுவாய். இதைக் குறிக்க இறைவனுக்கு "அ" என்றும், தோற்றுவித்த உலகை நிலைப்படுத்துவதை "உ" என்றும் மறுபடியும் தன்னுள் ஒடுக்கிக் கொள்வதை "ம்" என்றும் குறிக்கப்படுகின்றது. ஆக "ஓம்"என்று பிரபஞ்சத்தை ஆக்கி, அமைத்து அழிக்கும் இறைவனின் பெயர். இறைவனின் பெயராகிய பிரணவத்தை தியானம் செய்யும் பொழுது இறைவனுடைய குணங்கள் எல்லாம் தியானிப்பவனில் வெளிப்படுகின்றன.

கண்களை மூடித் தகுந்த ஆசனத்தில் தளர்ச்சியாய் உட்காருங்கள். மனதை ஏகாந்தப் படுத்தி நிதானமாக "ஓம், ஓம், ஓம்" என்று சொல்லிக்கொண்டே இருங்கள். மெது மெதுவாய் உணர்வு மனதைக் கடந்து "ஓம்" என்ற பிரணவ நாதத்திலே லயமாகும். இந்தளவு தினசரி தியானம் செய்து வந்தால் இறைவனுடைய குணங்கள் எல்லாம் வெளிப்படும்.

பிரணவ தியானம் செய்து பயனடையுங்கள்.
(அருள் - காயத்திரி சித்தம்)நூலிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீறு அணிவதன் விளக்கம்

சுத்தமான திருநீறு தயாரிக்கும் முறை காலப்போக்கில் மாற்றமடைந்த போதிலும் பழைய முறைகளைக் கடைப்பிடிப்பவர்களும் உண்டு. புல்மட்டும் உண்ணும் பசுவின் சுத்தமான எருவை, சிவராத்திரி அன்று உமியில் எரித்துக் கிடைக்கும் சாம்பலைத் தண்ணீரில் கலக்கி மறுபடியும் உலரவைத்து சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்த பின் நெற்றியிலிடுவதுதற்காகப் பாதுகாத்து வைக்க வேண்டும்.

திருநீற்றை நனைத்தும் நனைக்காமலும் அணிவதுண்டு. திருநீறு அணிந்தால் உடலின் துர்நீரை உறிஞ்சி எடுப்பதற்கும், உடல் வெப்பத்தைக் குறைப்பதற்கும் உடல் நிலையை மேன்மையடையச் செய்வதற்கும் வாய்ப்புண்டு என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

தியானத்தின் வடிவமான சிவபெருமானை மகிழ்விக்க மிகச்சிறந்தது திருநீறு அணிதல் என்று இந்துமதம் கருதியுள்ளது. நெற்றி, கழுத்து. தோள் மூட்டு முதலிய இடங்களில் திருநீறு அணியவேண்டும் என்று பொதுவாகக் கூறுவதுண்டு.

திருநீற்றை நனைத்து அணிவதன் மூலம் உடல் வெப்பம் குறைவதனால் ஜுரம் பாதித்தவர்களின் நெற்றியில் நனைத்து திருநீறு பூசினால் ஜுரம் இறங்குவதைக் காணலாம்.

மூலிகைச் செடிகளை சுத்தமான நெய்யில் ஹோம குண்டலத்தில் வேக வைத்த பின் எஞ்சியிருப்பதை திருவிபூதி என அழைப்பதுண்டு.

**ஓலைச் சுவடி**
**[இந்துமத ஆசார – நம்பிக்கை இரகசியங்கள்.]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் கோயிலில் தோப்புக்கரணம் இடுவதன் நோக்கம்

வலக் கையால் இடக் காதும் இடக் கையால் வலக் காதும் தொட்டு கொண்டு இரு கால்களும் பிணைந்து நின்று கொண்டு கை மூட்டுக்கள் பல முறை தரையில் தொட்டு கணபதியை வணங்குவதே தோப்புக்கரணம் இடுவதன் விதியாகும். வேறெந்த சன்னதியிலும் தோப்புக்கரணம் போடுவது கிடையாது ஆனால் பிள்ளையார் சன்னதியில் தோப்புக் கரணம் போடுவது மிக முக்கிய வணக்க மாகும்.

பக்தரைப் பொறுத்து இது எத்தனை முறை செய்ய வேண்டும் என்று முடிவு செய்யலாம். பொதுவாக மூன்று, ஐந்து , ஏழு, பன்னிரெண்டு, பதினைந்து, இருபத்தொன்று, முப்பத்தி ஆறு என பல எண்ணக்கையில் செய்வது உண்டு இவ்வாறு செய்வதில் அடியார்களிடமிருந்து துன்பங்கள் விலகிச் செல்லும் என்ற நம்பிக்கையுண்டு.

அறிவியில் சம்பந்தப்படுத்திப் பார்த்தால் புத்தியை உயர்த்தும் ஓர் உடற்பயிற்சியாக இதைக் காணலாம். இது இரத்த ஓட்டத்தை உயர்வடையச் செய்து மூளைக்குச் செல்லும் இரத்தஓட்டத்தை அதிகரிக்கும் என்று உணரப்பட்டுள்ளது.

- ஓலைச் சுவடி
இந்து மத ஆசார நம்பிக்கை
இரகசியங்கள் –

# மணி ஓசையின் தனித்தன்மை

கோயில்களில் பூஜை நேரங்களில் மணி ஓசை எழுப்பப்படுகின்றது. மணியோசை "ஓர் ஓம் கார நாதம்" என்பதை எம் முன்னோர்கள் கண்டு அறிந்துள்ளனர் அலை போல ஓசை உயர்ந்து படிப்படியாக தாழ்ந்து ஒரு குறிப்பிட்ட அளவில் உயரும் "ஓம்" என்ற பிரணவ மந்திரத்துக்கு மனதை உணர்வூட்ட இயலும் என்பது பெரியோர்கள் கருத்து. அடியார்களை பரவசத்துக்கு கொண்டு செல்லும் இயல்பு இம் மணி ஓசைக்கு உண்டு என்பதை நாம் அறியலாம்.

- ஓலைச் சுவடி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு "

வரலாற்றுப் பெருமை கொண்டதும், காலத்தினால் பழமையானதும், அடியார்களின் வழிபாட்டுப் பெருமை வாய்ந்ததும் தானகவே விரும்பி வந்து வில்லூன்றிப் பதியில் கோவில் கொண்டெழுந்து அருள் பாலிக்கும் வள்ளி தெய்வானை சமேத சண்முகப் பெருமானின் ஆலயத்துக்கு ஓர் இராஜகோபுரம் அமைக்க வேண்டும். என அடியார்கள் நீண்டகாலம் எண்ணியிருந்தார்கள். ஆனால் எம் பெருமானின் திருவருட் கிருபை 2004 ஆண்டு கிடைத்தது . அடியார்கள் ஒன்று கூடி வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலய இராஜகோபுரத் திருப்பணிச் சபை ஒன்றை அமைத்துக் செயல் பட முன்வந்தார்கள் இச்சபையின் முதல் கூட்டம் 13-12-2004ம் ஆண்டு நடைபெற்றது. சபைத் தலைவராக திரு . இரா. சம்பந்தன் (பாரளுமன்ற உறுப்பினர்) தெரிவுசெய்யப்பட்டார். உறுப்பினர்களாக 34 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு சபை இயங்கத் தொடங்கியது .ஆனால் உலகை வேதனைக்கு உள்ளாக்கிய "சுனாமி" பேரலை உருவாகி மக்களும் பாதிக்கப்பட்டு நாடு நகரங்கள் சின்னா பின்னமாகியது. இதனால் பணி பின் தள்ளபட்டது. 2005 ஆண்டு திருப்பணிகளை ஆரம்பிக்க முற்பட்ட போது எமது ஆலய ஆதீன பிரதம குரு சிவஸ்ரீ. சிவ. சுரானந்தேஸ்வர சர்மா 13-04-2005 இறையருள் சேர்ந்தார். இச் சம்பவத்தால் இவ்வாண்டும் திருப்பணியை ஆரம்பிக்கத் தடை ஏற்பட்டது.

2006ம் ஆண்டு சபையினர் பெருமுயற்சிகளை மேற்கொண்டு நிதி சேகரிக்கத் தொடங்கினர். அடியார்கள் இல்லம் நாடிச் சென்ற பொழுது அவர்கள் வில்லூன்றியான் திருப்பணிக்கு வாரி வாரி வழங்கினர். நாட்டில் நிலவிய வன்செயல்களும் தொடர்ந்தால் நிதிசேகரிக்கும் பணியும் தாமதமாகவே நடைபெற்றது. சேகரித்த பணத்தினூடாக 19-06 2008ம் ஆண்டு திருப்பணிகளை ஆரம்பித்தோம் . அன்றைய பூசைகளைத் தொடர்ந்து சிவஸ்ரீபூரண சுந்தரேஸ்வர ஐயர் முன் மண்டபத்தை இடிக்கும் பணியை ஆரம்பித்து வைத்தார்கள். அடியார்கள் ஓரளவு சிரமதானம் மூலம் பணியினைச் செய்தனர் . பழைய கட்டடமாகக் காணப்பட்ட முன் மண்டபத்தை இடித்து அழிக்கும் பணி மிகக் கடினமாக இருந்தது. பாரிய இயந்திரங்கள் (பெக்கோ) கொண்டு மண்டபத்தை இடித்து அழிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அவற்றைத் துப்பரவு செய்து அகற்றுவதற்குப் பெரும் பணச் செலவு ஏற்பட்டது.

சபையின் அனுமதியுடன் ஆலயமணியகாரர்களின் ஒருவராகிய திரு.ஆ.ஆ. ஜெயரெட்ணம் அவர்கள் கோபுரத்துக்குரிய மாதிரி படத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஆலய ஆதி மூலம் தொடக்கம் சகல அளவுப் பெறுமானங்களையும் எடுத்துக் கொண்டு தமிழ் நாட்டிற்குச் சென்றார்கள். அங்கு கட்டடக் கலையின் முது பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பியும் தமிழ் நாட்டின் தலை சிறந்த ஸ்தபதியுமான (83 வயதான) DR. கணபதி அவர்களைச் சந்தித்து கலந்துரையாடிய போது எமது ஆலய பெறுமானத்திற்கு. ஐந்து தளக்கோபுரம் அமைக்கபட வேண்டுமெனக் கூறி மாதிரி வரை படத்தை அன்னார் வரைந்து கொடுத்தார்கள். அந்த வரைபடத்தைப் பெற்று திருக்கோணமலை வந்த ஆலய மணியகாரர் அதைச் சபைக்குச் சமப்பித்தார்கள். அதைப் பார்த்ததும் சபை உறுப்பினர்கள் மத்தியில் உற்சாகமும் அடியார்கள் மத்தியில் கோபுரத்தை அமைத்து விட வேண்டுமென உத்வேகமும் உண்டாகி நிதி சேகரிப்புப் பணியை ஆரம்பிக்கவேண்டிய நடவடிக்கைகளையும் மும்முரமாக மேற்கொண்டார்கள்.

இந்த நிலையில் யாரைக் கொண்டு கோபுரம் அமைப்பது என்ற கேள்வி எம்மிடம் தொக்கி நின்றது. பலரும் பலரின் பெயர்களை குறிப்பிட்டாலும் எம் பெருமான் விருப்பத்தை நாம் அறிய முடியாமல் இருந்தது. ஒரு நாள் மாலை சபை உறுப்பினர்களாகிய நாமும் ஆலய மணியக்காரர் திரு.ஆ.ஆ.ஜெயரட்ணமும் ஆலய முன்றலில் உரையாடிக் கொண்டிருந்த போது ஒருவர் ஒரு இளைஞனை அழைத்து வந்து எமக்கு அறிமுகப்படுத்தினார். அந்த இளைஞன் வயதில் குறைந்தவர்.

எம் அருகே வந்து தான் தமிழ் நாட்டைச் சேர்ந்தவரென்றும் கோபுர வேலை நடைபெறுவுள்ளதாக அறிந்ததாகவும் தான் ஒரு ஸ்தபதி என்றும் தன் பெயர் கலியப் பெருமாள் விஜயன் என்றும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். தான் காரைக்காலைச் சேர்ந்தவர் எனவும் தெரிவித்தார். கோபுரம் அமைப்பது பெரும் பணி. அதற்கு அனுபவம் வயது முதிர்ச்சியும் கொண்ட ஒருவரை நாம் தேடிக் கொண்டிருந்த பொழுது இந்த இளைஞனின் வரவு எமக்கு திருப்தி அளிக்கவில்லை. அந்த நேரத்தில் கப்பலில்தான் யாழ் செல்லவேண்டிய நிலை இருந்தது. இந்த இளைஞனும் யாழ்செல்ல முற்பட்டபொழுது அன்று கப்பல் செல்லாத காரணத்தால் இங்கு ஒரு விடுதியில் தங்கியிருப்பதாகவும் யாழ்ப்பாணத்தில் பல கோயில்களில் சிற்ப வேலைகளை அவர் செய்வதாகவும் நாம் விசாரித்ததில் அறிந்து கொண்டோம்.

திரு.ஆ.ஆ.ஜெயரட்ணம் கட்டடவேலையில் கை தேர்ந்த காரணத்தால் திரு.க.விஜயனுடன் அளவளாவிய பொழுதுஅவரது திறமையையும் அனுபவத்தையும் கட்டடத்தகைமையையும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. வில்லூன்றிக் கந்தனேதனக்குக் கோபுரம் அமைக்க வேண்டிய ஒருவரை தேர்ந்து அனுப்பியதால் எமக்கு ஒரு ஸ்தபதியை தேடும் பணி குறைந்தது. திரு.விஜயன் மூலம் பணியை ஆரம்பிக்கத் திருப்பணிச்சபை அங்கீகாரம் அளித்தது. ஸ்தபதி திரு.க.விஜயனும் அவர்கள் குழுவினரும் திருகோணமலைக்கு வருகை தந்து ஸ்ரீ முருகன் தொண்டர் சபை மண்டபத்தில் தங்கிப்பணியை ஆரம்பித்தனர். 14-07-2008ம் ஆண்டு அடிக்கல் நாட்டும் வைபவம் ஆரம்பிக்கப்பட்டது. தலைவர் திரு. இரா.சம்பந்தன் (பா. உ) சிவாச்சாரியார், பெருமக்கள், அடியார்கள் அனைவரும் அடிக்கல் நாட்டும் வைபவத்தில் கலந்து கொண்டு திருப்பணியை ஆரம்பித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணிச் சேவைகள் ஆரம்பித்தவுடன் திருகோணமலை நகரம்,ஆலங்கேணி,ஈச்சந்தீவு, யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் பல இடங்களுக்கும் சென்று நிதியை சேகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நேரத்தில் ஆலய மணியக்காரர் திரு.ஆ.ஆ.ஜெயரட்ணம் அவரின் பங்களிப்பை நாம் மறந்துவிட முடியாது. இந்த பெரிய இராஜகோபுரம் அமைக்க ஸ்தபதியுடன் கைகோத்து நின்று செயலாற்றியவர் திரு.ஆ.ஆ.ஜெயரட்ணம் அவர்கள். அவரின் பங்களிப்பு இல்லை யென்றாம். நாம் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்து இருக்கும். அவர் எம்மோடு தோளோடு, தோள் நின்று இரவு, பகல் பாராது பணியாற்றியதன் காரணமாகச் சபையின் பங்கு வேலைச் சுமை எமக்குக் குறைந்து. நாம் நிதியை சேகரித்துக் கொடுக்க அவரே மேற்பார்வை செய்து பணம் வீண் விரயம் ஆகாது பணி திறம்படக் நடக்க காரணமாக இருந்தார்.

உள்ளூர் அடியார்களும வெளிநாடுகளில் உள்ள முருக பக்தர்களும் பெரும் உதவி புரிந்தார்கள் பணம் தட்டுபாடு ஏற்படும் கட்டத்திலும் முருகன் பணம் தருவார் வேலைகளை சிறப்பாக செய்யுங்கள், செய்யுங்கள் என்று இரா. சம்பந்தர் ஐயா எம்மை உற்சாக மூட்டித் திருப்பணி வேலைகள் தங்கு, தடங்கலின்று நடை பெற உதவி புரிந்தார் எமது ஆலய திருப்பணிவேலைகள் அனைத்துக்கும் தேர்த்திருப்பணி, கும்பாபிஷேகம் (1994) , இராஜகோபுரம் எல்லாவற்றுக்கு திரு.இரா.சம்பந்தன் (பா.உ) ஐயாவே தலைமை தாங்கி நிறைவு செய்துள்ளார்கள். வில்லூன்றிக் கந்தன் மேல் அளவற்ற பக்தியும், நம்பிக்கையும் கொண்ட காரணத்தால் அவர் இவ் ஆலயத் திருப்பணி நிறைவேற மூலவேராக இருந்து செயல்பட்டார். ஐயாவை எம்மால் மறக்க முடியாது.

எமக்கு கிடைக்கும் நிதிகளை வங்கியில் வைத்து கேட்கும் நேரம் எல்லாம் கொடுத்து நிதி வீணாகாமல் பாதுகாப்பதில் எமது சபைஇணைப்பொருளாளர்கள் திரு. சு.திருஞானசம்பந்தர், திரு.ஞா. சுப்பிரமணியம் (இருவரும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்கள், ஆரம்பகாலப் பொருளாளர் அமரர் முருகையாவின் பங்களிப்பையும் நாம் மறந்து விட முடியாது .

18/04/2011 பாலஸ்தாபனம் செய்து சிறு கோபுரத் திருத்த வேலைகளை மேற்கொண்டோம் ஆலயத்தின் எல்லாப் பகுதிகளும் திருத்த வேலைகள் நடை பெற்றுள்ளது. இராஜகோபுரம் , மணிக்கோபுரம் , தேர்முட்டி , வசந்த மண்டபம் , மடைப்பள்ளி , பிள்ளையார் , நாகதம்பிரான் , பழனியாண்டவர் சிறுகோபுரங்கள் , உள் மண்டபம் பளிங்கு கல் பதித்தல் , புதிய நவக்கிரகம் பிரதிஷ்டை செய்தல் , வர்ணம் தீட்டுதல் உட்பட சகல வேலைகளும் நிறைவு செய்யப்பட்டு எமது வில்லூன்றிக் கந்தன் ஆலயம் புதிய பொலிவுடன் புதிய ஆலயமாக மிளிர்ந்துள்ளது. எல்லாம் வற்றுக்கும் வில்லூன்றி கந்தன் திருவருள் தான் காரணம் முருகன் ஆட்டுவிக்கிறார் நாம் ஆடிக்கொண்டு இருக்கின்றோம் எம்மோடு இத் திருப்பணி வேலைகளில் ஆரம்பம் முதல் இரவு, பகல் பாராது சேவையாற்றிய திரு.க. கனகராசா, திரு. கி. இராஜரெத்தினம் திரு.து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.சண்முகநாதன், திரு. நற்குணம் , திரு.ப.நாகரெத்தினம் இவர்களுடன் இணைந்த ஏனைய உறுப்பினர்களின் பணி பாராட்டுதலுக்குரியது.

13/11/2011ம் திகதி நடைபெற்ற கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவைச் சிறப்பாக நிறைவேற்றி வைத்த வியாகரண சிரோமணி , சிவாச்சாரிய கலாநிதி சிவஸ்ரீபூரண தியாகராஜக் குருக்கள் அவர்களுக்கும் மற்றும் தமிழ் நாட்டைச் சேர்ந்த இசைமணி சாளவ K.ராஜப்பாக் குருக்கள் வேதாகமக்கிரியா திலகம் சிவஸ்ரீ.K.V ரவிக்குருக்கள் மற்றும் சிவாச்சாரியப் பெருமக்கள், ஆலய ஆதினப் பிரதம குரு சிவஸ்ரீ சுதாஹரக்குருக்கள். நிதி சேகரிக்க உதவிய திருப்பணிச் சபைத் தலைவர் திரு.இரா.சம்பந்தன் (பா.உ), திருப்பணிச் சபை உறுப்பினர்கள், ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை சிறப்பாகப் பணியாற்றி ஆலய மணியகாரர்கள் திரு.ஆ.ஆ.ஜெயரெட்ணம், திரு.ஞா. கதிர்காமதாசன், திருப்பணி நிதியை வாரி வாரி வழங்கிய அன்பர்கள், அடியார்கள், கோபுரத்தை அழகுற அமைத்துத் தந்த தமிழ் நாடு, பாண்டிச்சேரி காரைக்காலைச் சேர்ந்த திரு. கலியப்பெருமாள் விஜயன், வில்லூன்றிக் கந்தன் மார்பு அங்கியைச் சிறப்பாக செய்து தந்த ஸ்தபதி சபாபதி சிவசோதிலிங்கம் ( சேனையூர், மூதூர்) மற்றும் சிற்பாச்சாரியார்கள், வர்ணம் தீட்டிய கஞைர்கள் இரவு பகல் பாராது தொண்டாற்றிய இளைஞர்கள், ஸ்ரீ. மு.தொண்டர்சபையினர், நாதஸ்வரம் , தவில் வழங்கிய கலைஞர்கள், கும்பாபிஷேக கிரியைகளைப் பொறுப்பேற்றுச் செய்த அன்பர்கள், விசேட ஒலி,ஒளி அமைப்பைச் செய்தவர்கள் பாடசாலை ஆசிரியர், மாணவர்கள், ஆலயத்தைத் துப்பரவாக வைத்திருக்க எமக்கு வேண்டிய உதவிகளை செய்த நகரசபைத் தவைர் திரு. க. செல்வராசா(சுப்ரா) , சுகாதார அத்தியட்சகர், வேலை அத்தியட்சகர் , தொழிலாளப் பெருமக்கள், நகரக் காவல் துறையினர் அனைவருக்கும் குறுகிய நாளில் கும்பாபிஷேகமலரை பதிப்புச் செய்த அஷ்ரா பதிப்பகத்தினருக்கும், உழைத்த ஊழியர்களுக்கும். வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலய இராஜகோபுர திருப்பணிச் சபையின் சார்பில் எமது பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ்வண்ணம்**

**ந.செல்வஜோதி**

**கு.சிவமூர்த்தி**

**இணைச் செயலாளர்கள்**

**வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலய இராஜகோபுரத் திருப்பணிச் சபை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2008ம் ஆண்டுக்கு முன் ஆலய
முகப்புத் தோற்றம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org